மாலை தீப்பொறி

MALAE THEEPORI

2023 மார்ச் 16-31 தொகுதி 21 இதழ் 15

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200




# மாமேதை கார்ல் மார்க்ஸ் 140வது நினைவு நாள்

## மார்ச் 14

**மனிதகுலத்தை சுரண்டலிலிருந்து விடுவிக்கும்**

**தத்துவம்**

## மார்க்சியமே



# AISA - RYA அகில இந்திய மாணவர் கழகம்
# புரட்சிகர இளைஞர் கழகம் நடத்தும்

**மோடி அரசின் காவி, கார்ப்பரேட் அடிமைக் கல்விக் கொள்கைக்கு எதிராக...**

**இந்தித் திணிப்புக்கு எதிராக...**

**தமிழக, மக்கள் சார், முற்போக்கு, கல்விக் கொள்கைக்காக...**

**வேலைவாய்ப்பு வழங்கும் வளர்ச்சிக்காக...**

# மாணவர் - இளைஞர் மாநில மாநாடு



## 31 மார்ச் 2023



**நீதிபதி கிருஷ்ணய்யர் சமூகக் கூடம்,**
**(அப்பல்லோ மருத்துவ மனை &**
**ஜாஸ் பிளக்ஸ் தியேட்டர் அருகே)**
**கலைஞர் கருணாநிதி நகர், மதுரை.**

மோடியின் பிஜேபி அரசு, கல்வியைத் தனியார் முதலாளிகளுக்கு, கார்ப்பரேட் கல்வி மாஃபியாக்களுக்கு, வெளிநாட்டு கம்பெனிகளுக்கு விலை கூவி விற்று வருகிறது.

வெளிநாட்டு பல்கலைக் கழகங்களை இந்தியாவில் திறக்கிறோம், வெளிநாட்டுக் கல்வியை இந்தியாவில் வழங்குகிறோம் என்ற பெயரில், மேலை நாடுகளின் கல்வி குப்பைக் கூடமாய் இந்தியக் கல்வி முறை மாற்றப்படுகிறது. மேலை நாடுகளின் தரமற்ற கல்வி நிறுவனங்களுக்கு இந்திய கல்விச் சந்தையில் இடம் அளிக்கப்படுகிறது.

கல்வி எட்டாக்கனியாகி வருகிறது. கல்விக் கட்டணங்கள் விண்ணுயரப் பறக்கிறது. இல்லம் தேடி கல்வி என்ற பெயரில், பள்ளி - கல்லூரிக் கல்வியை, முறைசார் கல்வியை ஒழித்திடும் நவீன திட்டங்கள் வகுக்கப் படுகின்றன. ஆர்எஸ்எஸ் தொண்டர்கள் கோலோச்சும் இடமாக அது மாறி வருகிறது.

உயர்கல்வி நிறுவனங்கள் கார்ப்பரேட் கம்பெனிகளின் தொழிலாளர் பயிற்சிக் கூடங்களாக மாற்றப்படுகிறது. அறிவுசார் கல்வி, அறிவை வளர்க்கும் கல்வி என்பதற்குப் பதிலாக, கேள்வி கேட்க இயலாத, அடிமைக் கல்வி முறைக்கு வித்திடுகிறது புதிய கல்விக் கொள்கை. ஆங்கில ஏகாதிபத்திய மெக்காலே கல்வி முறையைப் போலவே, இன்று மோடி-ஷா கல்வி முறை புகுத்தப்படுகிறது.

கல்வியில் ஆள்வோர் - அடிமை; அறிவாளி நிர்வாகி -மூடத் தொழிலாளி; சிந்திக்கும் செல்வந்தர் மக்கள் - சொல்லும் வேலை செய்யும் எடுபிடிகள் என்பதாக கல்வியில் ஏற்றத்தாழ்வு, சாதிய படிநிலை, திட்டமிட்டு உருவாக்கப் படுகிறது.

இந்தித் திணிப்பு இல்லை என்று சொல்லிக் கொண்டே, அதன் கூடவே செத்த மொழி சமஸ்கிருத திணிப்பு தீவிரப் படுத்தப்பட்டு வருகிறது.

வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்தாடுகிறது. வேலை இல்லா இளைஞர் பட்டாளத்தை வளர்ப்பதன் மூலம் காவிப் படைக்கு ஆள் சேர்க்கும் திட்டம் அரங்கேறுகிறது. அக்னிபத் என்ற பெயரில் ராணுவத்தி லும் காண்ட்ராக்ட் முறை. இளைஞர்களின் நாட்டுப் பற்றை வியாபாரம் செய்ய எத்தனிக்கிறார் மோடி.

திமுக அரசு சொல்லும் தமிழக கல்விக் கொள்கை என்பது கார்ப்பரேட்டுகளுக்கு தொழிலாளரை சப்ளை செய்யும் கொள்கையாக இருக்கக் கூடாது. அரசு கல்வி கூடங்களை திறப்பதாக, தனியார் கல்வி நிறுவனங்களை தமிழக அரசே ஏற்று நடத்துவதாக இருக்க வேண்டும்.

கல்வி என்பது மாணவர்களின் பலபரிமான அறிவாற்றலை, சிந்தனைத் திறனை, எதையும் கேள்வி கேட்கும் விமர்சன மனப்பான்மையை வளர்ப்பதாக இருக்க வேண்டும்.

மூடநம்பிக்கைகளுக்கு எதிராக அறிவியல் சார் கல்வி முறையாக இருக்க வேண்டும்.

கல்விக்கும் நடைமுறைக்கும் தொடர்பில்லாத நிலையை ஒழித்து, அறிவாற்றலை வளர்க்கும், வேலை வாய்ப்புகளை வளர்க்கும் கல்வி முறையாக இருக்க வேண்டும்.

2023 மார்ச் 16-31

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 21 இதழ் 15

**உள்ளே...**

| | |
|---|---|
| பொதுச் செயலாளர் உரை | 4 |
| விசைத்தறித் தொழிலாளர் போராட்டம் | 12 |
| ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் | 15 |
| தோள் சீலைப் போராட்டம் 200 ஆண்டு | 19 |

**ஆசிரியர்**

**ஜி.ரமேஷ்**
9443507067

**ஆசிரியர் குழு**

**பாலசுந்தரம்**
**பழ.ஆசைத்தம்பி**
**அ.சந்திரமோகன்**
**கே.ஜி.தேசிகன்**

மேலாளர்
**சொ.இரணியப்பன்**
9840340741

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**
**(மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்)**
**தமிழ்நாடு**
**மாநிலக் குழுவின் அரசியல் ஏடு**

**10,11ஆவது தெரு, கருணாநிதி நகர்**
**அயனாவரம், சென்னை-600023**

நிர்வாக அலுவலகம்
3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை-600048

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com

தலையங்கம்

# அனிதாவும் ஆன்லைன் ரம்மியும்

அரியலூர் மருத்துவக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள அரங்கத்திற்கு அனிதாவின் பெயரைச் சூட்டியிருக்கிறார் தமிழக முதல்வர் ஸ்டாலின். அனிதா இன்னும் நினைவு கூரப்பட்டுக் கொண்டேயிருக்கிறார். ஆனால், அவர் என்ன காரணத்திற்காக தன் உயிரை மாய்த்துக் கொண்டாரோ அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. நீட் தேர்வு ரத்து செய்ய தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் போடப்பட்டது. அது கண்டு கொள்ளப்படாமல் இருந்தபோது, நீட் தேர்வை ரத்து செய்ய சட்டமியற்றப்பட்டு ஆளுநர்கள் கண்டு கொள்ளாமல் விடப்பட்டு, இப்போது குடியரசுத் தலைவர்ஒப்புதலுக்காக ஆண்டுக் கணக்கில் காத்துக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி, இப்போதுதான் புதிதாகக் கண்டு பிடித்ததுபோல், ஆன்லைன் ரம்மி விளையாட்டைத் தடை செய்ய வேண்டும் என்றால், அது ஒன்றிய அரசால் மட்டும்தான் முடியும் மாநில அரசால் ஒன்றும் செய்யமுடியாது என்று ஆன்லைன் ரம்மி தடைச் சட்டத்தைத் திருப்பி அனுப்பியிருக்கிறார். மீண்டும் சட்டமன்றத்தில் ஏகமனதாக சட்டம் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்படும் போது சட்டப்படி ஆளுநர் அதைத் திருப்பி அனுப்ப முடியாது. அதனால் அவர் இது ஒன்றிய அரசின் எல்லைக்குள் வருகிறது என்று சொல்லி, நீட் தேர்வு சட்டத்தைப் போல், இதையும் குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்பி விட்டுவிட்டு கிடப்பில் போடத் திட்டமிடுகிறார். ஆன்லைன் தடைச் சட்ட மசோதாவுக்கு ஒப்புதல் அளித்த ஆளுநர், தடைச் சட்டத்திற்கு ஒப்புதல் தராமல் இழுத்தடித்து திருப்பிவிட்டுள்ளார். மசோதாவுக்கும் சட்டத்திற்கும் இடைப்பட்ட காலத்தில், ஆளுநர் ஆர்.என். ரவியை ஆன்லைன் சூதாட்ட நிறுவனத்தின் முதலாளிகள் சந்திக்கிறார்கள். ஆளுநர் மாளிகை அப்பட்டமாக ஆன்லைன் சூதாட்ட முதலாளிகளின் புகலிடமாக மாறியுள்ளது. நீட் தேர்வோ ஆன்லைன் ரம்மியோ, எத்தனை பேர் இறந்தாலும் எங்களுக்குக் கவலை இல்லை என்கிறார் ஆர்எஸ்எஸ்ஸின் ஆளுநர். ஆனால், தமிழக அரசின் நடவடிக்கையானது சட்டம் இயற்றி ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற அனுப்பப்படுவதோடு தங்கள் கடமை முடிந்து விட்டதாக இருக்கிறது. சமீபத்தில் டாஸ்மாக் ஊழியர் ஒருவர் குண்டு வீசி கொல்லப்பட்டுள்ளார். முதல்வர் ஆனவுடன் முதல் கையொப்பம் மதுவிலக்கு என்று சொன்னது திமுக. ஆனால், இன்று வரை பல குடும்பங்கள் டாஸ்மாக்கால் சீரழிந்து கொண்டிருக்கிறது. அப்படியென்றால், ஆர்.என்.ரவிக்கும் ஸ்டாலினுக்கும் வித்தியாசம் கிடையாதா? மரணங்களை வேடிக்கை பார்க்கலாமா?

# நமது தலையாயக் கடமை “நமது சொந்த அரசியல் பலத்தை, வெகுமக்கள் அடித்தளத்தைக் கட்டியெழுப்புவதே!”

சிபிஐ(எம்எல்) கட்சியின் 11வது காங்கிரசில் கட்சிப் பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் “கட்சி அமைப்பு அறிக்கை” குறித்து உரையாற்றிய தொகுப்புரையில் சில பகுதிகள்

நமது செயலுக்கு அடிப்படையாகவிருக்கும் கம்யூனிஸ்ட் கோட்பாடுகள் மத்திய கமிட்டிக்கும் பொருந்தும். பலமாக இருந்தாலும் பலவீனமாக இருந்தாலும் அது மத்தியக் கமிட்டியையும் உள்ளடக்கியதுதான். அந்த உணர்வின் அடிப்படையில்தான் இந்த அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

சோவியத் சோசலிச குடியரசுகள் வீழ்ந்த பின்னர், பலரும் தங்களைக் கம்யூனிஸ்ட்டுகள் என்று சொல்லிக் கொள்வதிலிருந்து, சப்தமே எழுப்பாமல் வெளியேறினர். அப்போதுதான் நாம் வெளிப்படை செயல்பாட்டுக்கு வந்திருந்தோம். நாங்கள் கம்யூனிஸ்ட் கட்சியினர் என்று உரத்துச் சொன்னோம்.

மூலதனம் பொருளாதார ஏகபோகத்தின் மூலமும் அதிகார ஏகபோக மயமாக்கத்தின் மூலமும் தன்னைத் தானே வலுப்படுத்திக் கொள்கிறது, ஆனால், பரந்த மக்கள் பலமும் எண்ணிக்கையும் நம் பக்கமிருக்கிறது. நாம் மக்களை அமைப்பாக்க வேண்டும். அவர்களின் உணர்வை மேம்படுத்தப் பாடுபடவேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை சொல்கிறது. முதலாளித்துவம் எப்படி தன்னைத்தானே பலப்படுத்திக் கொள்கிறதோ அதேபோல, நமது அமைப்புகளும் துடிப்பாற்றல் மிக்க விதத்தில் மக்களை பெருமளவில் அமைப்பாக்குவதன் மூலம் தன்னைத்தானே பலப்படுத்திக் கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட ஆற்றலை உள்ளார்ந்ததாகக் கொண்ட அமைப்பு முறையை நாம் வலுப்படுத்திட வேண்டும் .வெகுமக்கள் போல்ஸ்விக் கட்சியைக் கட்டி எழுப்ப வேண்டும் என்று தோழர் வினோத்மிஸ்ரா சொன்னார். வெகுமக்கள் போல்ஸ்விக் கட்சி என்றால் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி என பொருளாகும். ஒரு புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி என்பது பரந்த மக்கள் செல்வாக்கைக் கொண்டதாகவும் போல்ஸ்விக் (கம்யூனிஸ்ட்) குணாம்சம் கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்று பொருளாகும். வெகுமக்கள் பலமும் போல்ஸ்விக் குணாம்சமும் ஒரு சேர இருக்கும் போதுமட்டும்தான் அது வெகுமக்கள் போல்ஸ்விக் கட்சியாக இருக்கமுடியும். இந்த இரண்டையும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்கமுடியாது. இன்னும் சொல்லப் போனால், வெகுமக்களை போல்ஸ்விக்குகளாக மாற்ற வேண்டும். போல்ஸ்விக்குகள் வெகுமக்களை ஈர்க்கத்தக்கவர்களாக இருக்க வேண்டும். அப்போது தான் நாம் வெகுமக்கள் போல்ஸ்விக்கட்சி எனக் கூறிக் கொள்ள முடியும். ஒவ்வொரு முறையும் நாம் இந்தக் கூற்றை, நமது அமைப்புகளின் மூலம் உயிருள்ள ஒன்றாக ஆக்கவேண்டும்.

வெளிப்படையான கட்சி என்றால் கட்டுப்பாடுகள் தளர்வாக இருக்கும் என்று பொருள் அல்ல. அது அசைந்து கொடுக்காத ஒன்றாக இருக்க வேண்டும். அதுகட்டுப்பாடுள்ள அமைப்பாக இருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் நாடாளுமன்ற வேலைகள் கொண்டு வரும் சவால்களையும் எதிர்கொண்டு நிற்க வேண்டும்.

நமது மேடைக்கு பல எதிர்க்கட்சித் தலைவர்கள் வரலாம். பாசிச எதிர்ப்பு அரசியலை முன்கொண்டு செல்ல அனைத்து விதமான பாசிச எதிர்ப்பு சக்திகளையும் திரட்டிக் கொள்வது கம்யூனிஸ்டுகளின் கடமை. ஆனால், அவர்களைத் திரட்டும் பலம் நமக்கு எப்போது வரும் என்றால், எப்போது நமது சொந்த அடித்தளம் பலமாக இருக்கிறதோ அப்போதுதான் அந்த பலம் வரும். எனவே, பாசிச எதிர்ப்புப் போராட்டத்தில் நாம் முன்னணியில் இருக்க வேண்டுமென்றால், நமது தலையாயக் கடமை என்பது நமது சொந்த அரசியல் பலத்தை, வெகுமக்கள் அடித்தளத்தைக் கட்டியெழுப்புவதே ஆகும்.

கடந்த பீகார் சட்டமன்றத் தேர்தலை ஆய்வு செய்தால், நமக்கு எங்கெல்லாம் வலுவான அமைப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் நாம் வெற்றி பெற்றோம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். நாம் வெற்றிவாய்ப்பை இழந்த இடங்களில்கூட நமக்கோர் பலம், அமைப்பு இருந்த காரணத்தினால்தான் நாம் போட்டியாளர்களாக இருக்க முடிந்தது. பொதுவான சிலநோக்கங்களின் அடிப்படையில் வேறு பலசக்திகளோடு ஒன்றுபடுவதன் மூலம் கிடைக்கும் பலம் அல்ல அது. மாறாக, நமது சொந்த பலத்தின் அடிப்படையில் தான் வேறு பலசக்திகளோடு ஒன்றுபடமுடியும். இதில் எந்தவிதமானமாயையும் இருக்கக்கூடாது.

நக்சல்பாரி காலத்திலிருந்தே, நமது கட்சி உருவெடுத்த முறையின் காரணமாக, கட்சி

அமைப்பைக் கட்டியெழுப்புவதில் பிரச்சனைகள் நீடித்ததாகவே இருக்கின்றன. நமது இயக்கங்களில், கருத்தியலில், கொள்கையில் அல்லது கட்சி வழியில் நாம் பலவீனமாக இல்லை. ஆனால், அமைப்பு விவகாரங்களில் நாம் மிகவும் பின்தங்கியுள்ளோம். நாம் வெற்றிகளைப்பார்க்கிறோம். ஆனால், வெற்றிகளின் பின்னே என்ன இருக்கிறது என்பதைப்பார்ப்பதில்லை. நாம் மூலதனத்தைப் பார்க்கிறோம். ஆனால், மூலதனத்தை உருவாக்கியதில் ஒழிந்துபோன உழைப்பை நாம் பார்ப்பதில்லை. நாம் 12 எம்எல்ஏ சீட்டுகள் வென்றதைப் பார்க்கிறோம். ஆனால், எம்எல்கட்சி அமைப்பு சுமார் 50 ஆண்டுகளாக இங்கு செயல்பட்டு வருகிறது என்பதைப் பார்ப்பதில்லை. சூழ்நிலை மாறிக் கொண்டே இருக்கும். ஆனால், நம்மைக் குடைபோல காத்து நிற்பது அமைப்பு மட்டுமே.

முதல் இடத்தில் கேரளாவிலும், இரண்டாவது மூன்றாவது இடங்களில் திரிபுரா பீகாரிலும் இடது சாரிகள் இருப்பதைக் காண்கிறோம். ஆனால், பீகாரின் பின்னணியில் பார்க்கும்போது அங்கேயுள்ள இடதுசாரி சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 16 என்பது கணிசமானதுதான். வங்காளத்தில் வரலாறு பின்னோக்கிச் சென்றுள்ளது. ஒரே ஒரு இடதுசாரி எம்எல்ஏ கூட அங்கில்லை. சிபிஐஎம் கட்சி பிரதானமாக கேரளாவிலும் தென்மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது. எனவே, இந்தி பேசும் மக்கள் வாழும் மாநிலங்களில் பிரதானமாக வேலை செய்யும் நமது தோள்களின் மீது மிகப் பெரும் சுமை சுமத்தப்பட்டுள்ளது.

இந்திப் பிராந்தியத்தில் நாம்தான் இடதுசாரி கட்சியாக இருந்து வருகிறோம். அதே பகுதியில்தான் ஆர்எஸ்எஸ்சும் மிகப் பலமாக இருக்கிறது. எனவே, பாசிச சக்திகளை நேருக்கு நேர் எதிர்கொள்ளும் கடமையை நாம் நிறைவேற்றியாக வேண்டும். 1990களில் இதே கடமையை நமது மாணவர் கழகம் எதிர் கொண்டு சாதித்தது. வாரணாசி, அலகாபாத், உத்தரக்கண்ட்டில் (மாணவர்) தேர்தல்களில் வெற்றி பெற்று, மாணவர் இயக்கத்தின் திசைவழியை மாற்றியது. மாணவர் இயக்கத்தின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்துக்குமான புதிய வாய்ப்புகளை உருவாக்கியது. அதேபோன்ற நேரம் இப்போது நிலவுகிறது. அந்த சவாலை நாம் ஏற்றாக வேண்டும். அதற்கு நம் அமைப்பைப் பலம் பொருந்தியதாக வளர்த்திட வேண்டும்.

அவ்வப்போது நினைவு படுத்திக்கொள்ளும் ஒன்றல்ல அமைப்பு என்பது. அதனை நாம் தொடர்ந்து மேம்படுத்த வேண்டும், சிறப்பானதாக்க வேண்டும். புதுப்பிக்க வேண்டும். மாபெரும் இயக்கங்களைக் கட்டி எழுப்பிய அத்தனை பேருமே அமைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி இருக்கிறார்கள். ”கற்பி, கிளர்ச்சி செய், அமைப்பாக்கு” என்று அம்பேத்கர் முழங்கினார். இந்த மூன்றில் ஒன்றில்லாமல் மற்றொன்று இல்லை என்பதை அவர் உணர்த்தினார். அவை அனைத்தும் ஒன்றொடு ஒன்று ஒருங்கிணைந்தவை.

அனைத்து வேலைகளையும் செய்வது அனைவருக்கும் சாத்தியமில்லை. நமது சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் மக்கள் பணியாற்றுகிறார்கள். மற்றவர்கள் மக்கள் மத்தியில் சென்று பணியாற்றுகிறார்கள். நாம் அனைவரும் நம் அமைப்பின் போர் வீரர்கள். பொதுச் சமூகம் எம்எல்ஏக்களை விஜபிகளாகப் பார்க்கலாம். ஆனால், நமக்கு அது போன்ற சிந்தனைச் சுமைகள் கிடையாது.

நாம் மக்களுக்காக ஆற்றும் அனைத்துப் பணிகளுமே உயர்ந்த, மதிப்புள்ள வேலைகள்தான். இதில் உயர்வு தாழ்வு ஏதுமில்லை. சிலருக்கு சில பொறுப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவ்வளவு தான். நமது அனைவருக்குமான பொதுவான அம்சம், மிக உயர்ந்த பொறுப்பு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் என்பதே. அதுதான் நமது முதன்மை அடையாளம். மற்ற அனைத்து அடையாளங்களும், அது பொதுச் செயலாளர் என்கிற பொறுப்பாக இருந்தாலும் சரி, மத்தியக் கமிட்டி உறுப்பினர் என்கிற பொறுப்பாக இருந்தாலும் சரி, எம்எல்ஏ என்கிற பொறுப்பாக இருந்தாலும் சரி, இவை அனைத்தும் நாம் செய்யும் வேலையைப் பொறுத்து, காலத்துக்கு காலம், அவ்வப்போது, மாறக்கூடியவை.

கட்சி அமைப்பில் பெண்களை ஏராளமாகச் சேர்த்திட வேண்டும். அதற்கு சிறப்பு கவனம் செலுத்திட வேண்டும். நமது அனைத்து முயற்சிகளும் அதை நோக்கி மேற்கொள்ளப் படவேண்டும். பெண்களின் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது மட்டும் போதாது, பெண் தலைவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது இன்னும் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

நாம் இந்தியாவின் பன்முகத் தன்மையைப் பிரதிபலிப்பதை நோக்கி நகரவேண்டும். ஆனால், அடையாளஅரசியல் செய்வதன் மூலம் நாம் அதனைச் சாதிக்க முடியாது. அம்பேத்கார் பல வகைப்பட்ட கருத்தியல்கள் பற்றி பேசினார். ஆனால், அவரைப் பின்பற்றியவர்கள் பின்னாட்களில், அவரை தலித்துகளின் தலைவராகச் சுருக்கிவிட்டனர்.

ஒடுக்கப்பட்ட மக்களை போராட்டங்களில் அணி திரட்டும் போது, அவர்கள் மத்தியில் கம்யூனிச கருத்துகளை நாம் உறுதியாக எடுத்துக்கூற வேண்டும். ❐

# சமத்துவம், நீதி, கண்ணியமிக்க வாழ்வாதாரம் பெறும் உரிமைகளுக்காகப் போராடுவோம்!

# பெண்களுக்கு எதிரான கார்ப்பரேட் இந்துத்துவா வன்முறைக்கு பதிலடி கொடுப்போம்!

பெண்களின் சமூக, பொருளாதார, கலாச்-சார, அரசியல் சாதனைகளை மதிக்கவும் பெண்களின் உரிமைகளை மேம்படுத்தவும் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக சர்வதேச பெண்கள் தினம் அனுசரிக்கப்படுகிறது. இருப்பினும், பெண்கள் தினம் என குறிக்கப்பட்டுள்ள எட்டு மணிநேர வேலையின் வெற்றி, புதிய தொழிலாளர் சட்டங்களின் மூலம் தலைகீழாக மாற்றப்பட்டு வருகிறது என்பது நமது காலத்தின் நகைமுரணாகும். பணியிடங்களில் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்தக்கூடிய சம வேலைக்கு சம ஊதியத்திற்கான உத்தரவாதம் இன்னும் அளிக்கப்படவில்லை. கிராமப்புற ஏழைகளுக்கு வேலை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட (நூறு நாள் வேலைத்திட்டம்)த்தின் சிக்கலான நடைமுறைகள் காரணமாக பெரும் பகுதி பெண்கள் இந்த திட்டத்தில் வேலைசெய்ய முடியாத நிலை உள்ளது. மதிய உணவுப் பணியாளர்கள், ஆஷா தொழிலாளர், அங்கன்வாடிப் பணியாளர்கள், இதர பணியாளர்கள் என லட்சக்கணக்கான பெண்கள் பல்வேறு அரசாங்கத் திட்டங்களின் கீழ், நாடு முழுவதும் வேலை செய்கிறார்கள்; பொது நலப்பணிகளுக்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கும் இவர்கள், கவுரவ ஊதியம் என்ற பெயரில் அற்ப ஊதியமே பெறுகின்றனர்; தொழிலாளர் நலன்களை பெறுவதற்குக் கூட, இவர்கள் தொழிலாளராக அங்கீகரிக்கப்படவில்லை. கோவிட்-19 பெருந்தொற்றின் போது தங்கள் உயிரைப் பணயம் வைத்த தொழிலாளர் இவர்கள். மேலும், பெரும்பான்மையான பெண்களைக் கொண்ட பெரும் எண்ணிக்கையிலான தூய்மைப்பணித் தொழிலாளர், நிரந்தரப்படுத்தப்படவுமில்லை; அவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படவுமில்லை. ஏற்றுமதி ஆடைகள் அல்லது எலக்ட்ரானிக் பொருட்களைத் தயாரிக்கும் நிறுவனங்கள் போன்ற அமைப்புசாரா துறைகளில் பெண்கள் அதிகமாக சுரண்டப்படுகிறார்கள்; குறைந்த ஊதியமே பெறுகிறார்கள். கழிவறைகள், குழந்தைகள் காப்பகம் போன்ற அடிப்படை வசதிகளும் மகப்பேறு சலுகைகளும் அவர்களுக்கு மறுக்கப்படுகின்றன. மாணவிகளுக்கும் பணிபுரியும் பெண்களுக்கும் மாதவிடாய் விடுப்புக்காக, சமீபத்தில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் ஆதரவான பலன் கிடைக்கவில்லை; முடிவெடுக்கும் பொறுப்பை ஆட்சியாளர்களிடம் விட்டுவிட்டது நீதிமன்றம். அத்தியாவசியப் பொருட்களின் விண்ணை முட்டும் விலைவாசி உயர்வு, பணவீக்கம், ஜிஎஸ்டி ஆகியவை ஏழைகளை விளிம்பு நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது; அதனால், பற்றாக்குறையின் பாதிப்பையும் சுமையையும் பெண்கள் அனுபவிக்கிறார்கள்; மேலும், பாதுகாப்பற்ற, குறைந்த ஊதியம் பெறும் வேலைகளுக்குத் தள்ளப்படுகிறார்கள்.

மற்றொரு பக்கம், பெண்கள் கடினப்பட்டு வென்றெடுத்த உரிமைகள் காவிப் படையினரால் பறிக்கப்படுகின்றன. கடந்த 2002-ம் ஆண்டு குஜராத் கலவரத்தின் போது, பில்கிஸ் பானு என்ற கர்ப்பிணிப் பெண்ணை பாலியல் வன்முறை செய்து, அவருடைய மூன்று வயது மகள் உட்பட 14 குடும்ப உறுப்பினர்களை கொலை செய்த குற்றவாளிகள், "நன்னடத்தை" பேரால் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டு, அவர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டு, மரியாதை செய்யப்பட்டதோடு, இனிப்புகளும் வழங்கி வரவேற்கப்பட்டது. இது தேசிய அவமானமாகும்.

நமது அரசியலமைப்பில் பொறிக்கப்பட்டுள்ள மத சுதந்திரத்திற்கான அடிப்படை உரிமைக்குக் கூட உத்தரவாதம் இல்லை. கர்நாடகாவில் ஹிஜாப் அணிந்த மாணவிகள் மீதான தாக்குதல்கள், லவ் ஜிகாத் (காதல் விடுதலை) என்ற பெயரிலான தாக்குதல்கள், ஒரே சிவில் சட்டத்தின் மதவெறி

அம்சம், ஜஹாங்கிர்புரி(தில்லி)யில் சிறுபான்மை மக்களின் குடிசைகளை புல்டோசர் வைத்து தரைமட்டமாக்கியது சிறுபான்மை மக்களுக்கு எதிரான கொடுமையின் கொடுமையாகும்.

அதோடு, இந்தியா: மோடி எனும் கேள்வி என்ற பிபிசி ஆவணப்படம் முதற்கொண்டு, பாடகி நேஹா சிங் ரத்தோருக்கு காவல்துறையின் அறிவிப்பாணை வரை, ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களும் கலைஞர்கள் அச்சுறுத்தப்படுவதும் கருத்துச் சுதந்திரத்தின் மீதான இத்தகைய தாக்குதல்கள் அன்றாட நிகழ்வாகி வருகிறது. கலாச்சார முனையில், சனாதன தர்மத்தின் வெற்றியாளர்களுடைய ஆணாதிக்க, சாதியக் கட்டுப்பாட்டு ஆணைகளால் பெண்கள் பெருமளவு பாதிக்கப்படுகிறார்கள். காதலர் தினத்தன்று, பசுக்களை அணைக்கும் தினத்திற்கான (அவர்களது) அழைப்பு மிக சமீபத்தியதாகும். பெண்களின் உடல்களை ஒழுக்கநெறி அடிப்படையில் கட்டுப்படுத்தும் சம்பவங்கள், கல்வி வளாகங்களிலும் பணி யிடங்களிலும் வளர்ந்து வருகின்றன. பெண்களின் விருப்பத்தேர்வு, கருத்துச் சுதந்திரம் ஆகியன கடும் அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ளது.

கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக வன்முறைச் சூழலுக்கு தீர்வுகாண பெண்கள் இயக்கம் ஈடுபட்டுள்ளது. ஒரு ஜனநாயக அமைப்பில், பல்வேறு வகையான வன்முறைகள் உள்ளன; குடும்பத்திலோ பணியிடத்திலோ, இந்த வன்முறைகளை கட்டுப்படுத்த பல்வேறு சட்டங்கள் இருந்தபோதிலும், அச்சட்டங்கள்தான் தோல்வியடைந்தன! தனது குடிமக்களை, குறிப்பாகப் பெண்களைப் பாதுகாக்க, இந்திய ஜனநாயகம் தவறிவிட்டது. சமூக வெளிகளான மதம், கல்வி, பணியிடம், பொழுதுபோக்கிடம் அல்லது எந்தவொரு நிறுவனமும் பெண்களை குறிவைத்துத் தாக்கும் வெளிகளாகவே மாறியுள்ளன. பெண்கள் இயக்கம் வன்முறைக்கு எதிராகப் போராடி வருகிறது. ஆனாலும், ஷ்ரத்தா கபூர் கொலை போன்ற கொடூர சம்பவங்கள் நடக்கின்றன. டெல்லியில் கொடூரமான முறையில் நடைபெற்ற நிர்பயா பாலியல் வன்முறை வழக்கு, வர்மா கமிட்டியின் பல பரிந்துரைகளுக்கு வழிவகுத்தது. ஆனால், விரைவு நீதிமன்றங்கள் எதுவும் இல்லாத நிலையில், பெண்களின் பாதுகாப்பு குறித்த கவலைகள் இன்னும் தீர்க்கப்படாமலே இருக்கும் நிலையில் அந்தப் பரிந்துரைகள் எதுவும் செயல்படுத்தப் படாமலேயே உள்ளன. நீதித்துறை, சட்டமன்றம் அல்லது ஊடகங்கள் என அனைத்து ஜனநாயக அமைப்புகளும் காவிப் படையின் ஆணாதிக்க கட்டுப்பாட்டு ஆணைகளுக்கு இரையாகிவிட்டதாகவே தோன்றுகிறது! இது சங்கிகளின் அமுத காலமாகும்! கார்ப்பரேட் இந்துத்துவா சக்திகளால் நடத்தப்படும் பாசிச வன்முறையை எதிர்த்து ஒன்றுபடுவோம்!

## நாங்கள் கோருகிறோம்:

1. சம வேலைக்கு சம ஊதியம் வேண்டும்.
2. ஆஷா, மதிய உணவுப் பணியாளர்கள், அங்கன்வாடி, தூய்மைப் பணியாளர்கள் உட்பட அனைத்து தொழிலாளர்களுக்கும் வேலை நிரந்தரம் செய்யப்பட வேண்டும். குறைந்தபட்ச ஊதியம் வழங்க வேண்டும்.
3. மகாதேஊவேஉதி-தின் கீழ் ஆண்டுக்கு 200 நாட்கள் வேலையும், அதைப் பெறுவதற்கான எளிய வழிமுறையும் வேண்டும்.
4. பில்கிஸ் பானுவிற்கு நீதி வழங்க வேண்டும்.
5. ஒவ்வொரு மாவட்டத்திலும் விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டும்.

**ஆணாதிக்கம், மதம், சாதி மேலும் பெருந் தொழில் குழும, இந்துத்துவா பெருங்கூட்டணி பாசிசத்திற்கு எதிராகப் போராடுவோம்! சமத்துவத்திற்காகப் போராடுவோம்!**

**-அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம்**

**(மார்ச் 8 உழைக்கும் பெண்கள் நாளை ஒட்டி பெண்கள் கழகத்தின் மய்ய அமைப்பால் வெளியிடப்பட்ட அறிக்கை)*

# வடகிழக்கு மாநிலங்களின் சட்டமன்ற தேர்தல் மற்றும் இடைத்தேர்தல் முடிவுகள் குறித்து இகக(மாலெ) அறிக்கை

திரிபுராவில் பாஜகவிற்கு வாக்கு சதவீதம் மற்றும் வெற்றி பெற்ற இடங்களின் எண்ணிக்கை சரிந்தாலும், பாஜக ஆட்சியை தக்கவைத்துக் கொண்டது. குஜராத் மற்றும் உத்தரகாண்ட் மாநிலங்களைப் போலவே, திரிபுராவிலும், தேர்தலுக்கு ஒரு வருடம் முன்னதாகவே முதலமைச்சரை மாற்றியதன் மூலம், மாநில ஆட்சிக்கு எதிர்ப்பை பாஜக தெளிவாகக் குறைக்க முடிந்தது. திரிபுராவின் பழங்குடியின மக்களிடையே மக்கள் ஆதரவுடன் பிராந்தியக் கட்சியாக திப்ரா மோதா தொடர்ந்து எழுச்சி பெற்றிருப்பது திரிபுரா தேர்தல்களின் மிக முக்கியமான அம்சமாகும். திப்ரா மோதாவின் எழுச்சி மும்முனைப் போட்டியில் பாஜக தனது அரசாங்கத்தை காப்பாற்ற மிகப்பெரிய உதவியாக மாறியுள்ளது. மோதாவின் சொந்த வெற்றி எண்ணிக்கை, மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும், தேர்தலுக்கு முந்தைய எதிர்பார்ப்பு மற்றும் கணிப்புகளுக்கு குறைவாகவே உள்ளது. ஆயினும்கூட, 12 க்கும் மேற்பட்ட எஸ்டி அல்லாத இடங்களில், சிபிஐ(எம்)-காங்கிரஸ் கூட்டணிக்கும் திப்ரா மோதாவுக்கும் இடையே பாஜக அல்லாத வாக்குகள் பிளவுபட்டதும், மிகக் குறைந்த அளவில் திரிணாமுல் காங்கிரஸ் வாக்குகளை பிரித்ததும், பிஜேபிக்கு சாதகமாக செயல்பட்டன.

சிபிஐ(எம்எல்) சுயேச்சையாக ஒரு இடத்தில் மட்டுமே போட்டியிட்டது, அதே நேரத்தில் பெரும்பாலான இடங்களில் இடது-காங்கிரஸ் கூட்டணிக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட எஸ்டி பழங்குடி தொகுதிகளில் மோதாவையும் ஆதரித்தது. சிபிஐ(எம்எல்) வேட்பாளர் தோழர் பார்த்தா கர்மாகர், உதய்பூர் மாவட்டத்தில் உள்ள ராதாகிஷோர்பூர் தொகுதியிலிருந்து 1,000 வாக்குகளுக்கு மேல் பெற்று மூன்றாவது இடத்தைப் பிடித்தார்.

நாகாலாந்தில், பிஜேபி என்டிபிபி தலைமையிலான ஆளும் கூட்டணியில் இளைய பங்காளியாக உள்ளது, மேகாலயாவில் இரண்டு எம்எல்ஏக்களுடன், பிஜேபி மீண்டும் ஆட்சியதிகாரத்தில் நுழைவதற்காக என்பிபி உடனான தனது கூட்டணியை புதுப்பித்துள்ளது. இதன்மூலம் 2023 சட்டமன்றத் தேர்தலின் முதல் சுற்றில் மூன்று வடகிழக்கு மாநிலங்களில் பாஜக ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டது.

திரிபுரா, மேகாலயா மற்றும் நாகாலாந்தில் காங்கிரஸின் செயலாற்றல் காங்கிரஸ் புத்துயிர் பெறுவதற்கான சிறிய அறிகுறிகளைக் காட்டியபோது, அக்கட்சி மகாராஷ்டிரா மற்றும் மேற்கு வங்கத்தில் இரண்டு குறிப்பிடத்தக்க இடைத்தேர்தல் வெற்றிகளைப் பெற்றது, அந்தந்த ஆளும் கட்சிகளிடமிருந்து அவரவர் பாரம்பரிய இடங்களில் இருந்து தலா ஒரு இடத்தைப் பெற்றது. மகாராஷ்டிராவில், 28 ஆண்டுகளாக பிஜேபி வசம் இருந்த கஸ்பா பெத் தொகுதியில் என்சிபி மற்றும் உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனாவின் ஆதரவுடன் கிடைத்த காங்கிரஸ் வேட்பாளரின் வெற்றி ஷிண்டே- ஃபட்னாவிஸ் ஆட்சிக்கு எதிராக வளர்ந்து வரும் மக்கள் கோபத்தைக் குறிக்கிறது.

தமிழ்நாட்டில் ஈரோடு தொகுதியை காங்கிரஸ் அமோக வெற்றியுடன் தக்க வைத்துக் கொண்டது, ஆனால் ஜார்கண்டில் ராம்கர் இடைத்தேர்தலில் பாஜகவின் கூட்டணிக் கட்சியான AJSU-விடம் தோல்வியடைந்தது.

மேற்கு வங்கத்தில் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் உள்ள சாகர்திகியில் இருந்து காங்கிரஸ் வேட்பாளரின் வெற்றி, பிஜேபியின் தொடர்ச்சியான சரிவையும், இடதுசாரி-காங்கிரஸ் கூட்டணி சட்டமன்ற அரங்கில் பிரதான எதிர்க்கட்சியாக உருவெடுக்கும் சாத்தியப்பாடுகளை உறுதியளிக்கும் வகையில் பிரதிபலிக்கிறது. திரிணாமுல் காங்கிரஸ்

கட்சியின் - டிஎம்சியின் தவறான ஆட்சிக்கு எதிராக பல்வேறு தரப்பு மக்களிடையே மக்கள் கோபம் அதிகரித்து வருகிறது, மேலும் சாகர்திகி தொகுதி வெற்றி மாநிலத்தில் நடந்து வரும் மக்கள் போராட்டங்களுக்கு நிச்சயமாக ஊக்கத்தை அளிக்கும். பாஜக அல்லாத ஒரே எதிர்க்கட்சி எம்.எல்.ஏ., நவ்சாத் சித்திக் சமீபத்தில் போலீசாரால் கைது செய்யப்பட்டார்; நேற்று ஜாமீன் பெற்றுள்ளார். இளம் முஸ்லிம் எம்எல்ஏ ஒருவரை போலீஸார் அவமானப்படுத்தியதற்கு எதிராக சாகர்திகி வாக்காளர்கள் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்து ஆளும் திரிணாமுல் காங்கிரசுக்கு தோல்வியை ஏற்படுத்தினர்; மாநில சட்டமன்றத்தில் பாஜக அல்லாத எதிர்க்கட்சிகளின் எண்ணிக்கை அதிகரித்தது.

சட்டசபை மற்றும் இடைத்தேர்தல் முடிவுகள், முக்கியத்துவம் வாய்ந்த 2024 தேர்தலுக்கு முன்னதாக பாஜக அல்லாத எதிர்கட்சிகளுக்கு முன்னோக்கி செல்வதற்கானப் பாதையை மீண்டும் நமக்குக் காட்டுகின்றன. தேர்தல்களில் திறமையான எதிர்க்கட்சி ஒற்றுமையும், கீழ்மட்டத்தில் சக்திவாய்ந்த போராட்டங்கள் மற்றும் மக்கள் அறுதியிடலும், இரண்டின் ஒருங்கிணைப்பும் நிச்சயமாக பாசிச சக்திகளை அதிகாரத்தில் இருந்து வெளியேற்ற முடியும். சமீபத்தில் பாட்னாவில் நடைபெற்ற 11வது மாநாட்டில் தீர்மானித்தபடி, இந்த இலக்கை அடைய CPI(ML) தனது முழு பலத்துடனும் ஆற்றலுடனும் அயராது உழைக்கும்.

**மத்திய கமிட்டி, சிபிஐ(எம்எல்) விடுதலை**

## உளுந்தூர்பேட்டையில் வீடு, வீட்டுமனை கோரி ஆர்ப்பாட்டம் - முற்றுகை

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை தாலுகா ஆண்டிகுழி ஊராட்சிக்கு உட்பட்ட விஜயங்குப்பம் கிராமம் தலித்து மக்கள் நூற்றுக்கு மேற்பட்டோருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி 10.3.2023 அன்று இகக(மாலெ) கட்சி சார்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து உளுந்தூர்பேட்டை தாலுகா அலுவலகத்திற்கு மனுக்கொடுக்கச் சென்றபோது, அங்கு வட்டாட்சியர் இல்லை. துணை வாட்டாட்சியரும் மனுவை பெற்றுக் கொள்ள தாமதம் செய்ததால் அலுவலகத்திற்கு உள்ளே அமர்ந்து தோழர்கள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன் பிறகு அதிகாரிகள் வந்து மனுக்களை பெற்றுக் கொண்டனர். போராட்டத்திற்கு தோழர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். தோழர்கள், கந்தசாமி, ஏழுமலை, கலாமணி, கல்யாணி, அன்பழகன், கொளஞ்சி, காமராஜ், கண்ணன், வல்லமநாதன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர் இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் கலியமூர்த்தி உரையாற்றினார்.



## பாஜகவின் பொய் பிரச்சாரத்தை, போலிச் செய்திகளை, வதந்திகளை, அதன் தொழிலாளர் விரோத கொள்கைகளை எதிர்த்திடுவோம்!

**ஒன்றிய அரசே!**

**புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் பாதுகாப்பு, கவுரவம், வாழ்க்கைக்கான கூலி ஆகியவற்றை உத்தரவாதம் செய்ய மத்திய சட்டமியற்று!**

**கிராமப் பகுதிகளிலேயே வேலை வாய்ப்புகளை உறுதி செய்திடும் வகையில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை வலுப்படுத்திடு!**

பீகார் தொழிலாளர் மற்றும் பிற வட மாநிலத் தொழிலாளர்கள் மீதான தாக்குதல் குறித்த போலி செய்திகள் கடந்த ஒரு வார காலமாக சமூக வலைத்தளங்களில் வெள்ளமெனப் பெருகி ஓடியது. ஹோலி பண்டிகையைக் கொண்டாட தங்கள் சொந்த ஊருக்கு திரும்பிக் கொண்டிருந்த புலம் பெயர்ந்த தொழிலாளரை, அவர்கள் மீதான தாக்குதல் காரணமாக அவர்கள் வெளியேறுகிறார்கள் என்று கெடுநோக்குடன் தவறாகச் சித்தரிக்கப்பட்டது. இந்த போலிச் செய்தியை சரிபார்க்காமலே பல்வேறு ஊடகங்களும் பத்திரிகைகளும் எடுத்துக் கொண்டு செய்தி வெளியிட்டன. உதாரணத்திற்கு டைனிக் பாஸ்கர் என்ற பத்திரிகை, தமிழ்நாட்டில் 15 பீகார் தொழிலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் புலம்பெயர்ந்த பீகார் தொழிலாளர் தலிபான் வகைப்பட்ட தாக்குதலை சந்திப்பதாகவும் செய்தி வெளியிட்டது.

புலம் பெயர்ந்த தொழிலாளர் தாக்கப்படுவதாக வேண்டுமென்றே போலி காணொளிக் காட்சிகளை வெளியிட்டு, அவர்களிடையே அச்சத்தையும், பீதியையும் பரப்புபவர்கள் மீதும், மக்களிடையே மொழி சார்ந்த மோதலையும், பிளவையும் தூண்டிவிடுபவர்கள் மீதும், கடும் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டுமென நாங்கள் கோருகிறோம்.

தமிழ் நாட்டு மக்கள் மீது வெறுப்பை விதைப்பதன் மூலம் அரசியல் ஆதாய அறுவடை தேடும் சங் பரிவாரின் கேடுகெட்ட நிலையை நாங்கள் கண்டிக்கிறோம். பொதுமுடக்க காலத்தின்போது, புலம்பெயர்ந்த தொழிலாளர் கொடூரமான கதவடைப்பால் பாதிக்கப்பட்டனர். பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர்களும், அவர்களது குடும்பத்தினரும் நூற்றுக்கணக்கான கிலோமீட்டர்கள் நடந்தே தங்கள் வீடுகளுக்கு சென்று சேர வேண்டியிருந்தது. சங் படை மீண்டும் ஒரு முறை, தங்கள் அரசியல் ஆதாயத்திற்காக, புலம் பெயர்ந்த தொழிலாளர்களை பயன்படுத்த பார்க்கிறது.

தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கையை சூனியமாக்கும் நவ தாராளவாத பொருளாதாரக் கொள்கையை பின்பற்றும் மோடி அரசாங்கத்தின் இடையறாத தாக்குதலுக்கு நாட்டின் உழைக்கும் மக்கள் ஆளாகிக்கொண்டிருக்கிறார்கள். மாறி மாறி நிகழும் வறட்சி, வெள்ளம் காரணமாகவும், விவசாய நெருக்கடியாலும், வேலைக்கான வாய்ப்புகள் சுருங்கி வருவதாலும், கிராமப்புர இந்தியா கடும் வேலை வாய்ப்பு நெருக்கடியை சந்தித்து வருகிறது. பெருமளவில் சொந்த ஊரிலிருந்து வெளியேறுவது நடைபெற்று வருகிறது. முதியோரும் பெண்களும் வேலை இழந்து தவிக்கின்றனர். இது போன்ற சூழலில் கிராமப்புர வேலை உறுதித் திட்டம் தான் கிராமப்புர வேலைவாய்ப்புக்கான ஒரே ஆதாரமாகும். ஆனால், மோடி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததிலிருந்து இந்தத் திட்டத்தை அழிந்து போகும் படி கிடப்பில் போட்டு விட்டது. பட்ஜெட்டில் இந்தத் திட்டத்திற்கான நிதியை மோடி அரசாங்கம் 33% குறைத்து விட்ட காரணத்தினால், வேலை கோரும் கோடிக்கணக்கான தொழிலாளர்கள், வேலை மறுக்கப்பட்டு திரும்ப அனுப்பப்படுகின்றனர். ஏற்கனவே செய்து முடித்த பணிக்கான ஊதியம் குறித்த காலத்தில் தொழிலாளருக்கு வழங்கப்படுவதில்லை என்பதால் கிராமப்புர வேலை உத்தரவாதத் திட்டத்தின் நோக்கமே தோல்விக்கு உள்ளாக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தில் பட்டினி ஊதியத்திற்கு மேல் சிறிதளவு கூட கூடுதல் தொகை வழங்கப்படுவதில்லை

என்பதால் திட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கு முறையான வாழ்வாதாரத்தை அது மறுத்து வருகிறது.

அதே நேரத்தில், நகர்ப்புறங்களில் புலம்பெயர்ந்த தொழிலாளரது மோசமான வாழ்நிலையை மாற்ற நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, அவர்களின் முறைசாரா உழைப்பு,12 மணி நேரமாக நீளும் வேலை நாள், சம்பளத்துடன் கூடிய வார விடுமுறையின்மை, வருங்கால வைப்பு நிதியும், தொழிலாளர் ஈட்டுறுதியும் இன்மை, மோசமான வாழ்நிலைமை, கட்டற்று பெருகுகிற ஊதிய திருட்டு, தொழிலாளர் சட்டப் பாதுகாப்பு இல்லாமை ஆகியவற்றை மோடி அரசாங்கம் தன்னுடைய அரசியல் விளையாட்டுக்குத் தீனியாகப் பயன்படுத்திக்கொள்கிறது.

இந்த அப்பட்டமான அயலார் வெறுப்பு மற்றும் பிரிவினைச் சதியை நாட்டின் உழைக்கும் மக்கள் புறக்கணிக்க வேண்டும் என அனைத்திந்திய விவசாய கிராமப்புறத் தொழிலாளர் சங்கமும் (அயர்லா) ஏஐசிசிடியுவும் அறைகூவல் விடுக்கிறது.

கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைக்கிறது.

1. புலம்பெயர்ந்த தொழிலாளர் பாதுகாப்பு, கவுரவம், வாழ்க்கைக்கான கூலி ஆகியவற்றை உத்தரவாதம் செய்யும் வகையில் மத்திய சட்டம் இயற்று! இது போலவே, மாநிலங்களும் கூட, தங்கள் மாநிலங்களில் உள்ள, புலம் பெயர்ந்த தொழிலாளர்களை பாதுகாப்பதற்கு, திட்டங்களை உருவாக்க வேண்டும்.
2. தேசிய ஊரக வேலை உத்திரவாத சட்டத்தை வலுப்படுத்திடு! 200 நாட்கள் வேலை, நாட்கூலியை ரூ 600 ஆக உயர்த்திடு. நிலுவை ஊதியத் தொகையை உடனடியாக வழங்கிடு!உள்ளூரிலேயே, செயலூக்கமிக்க வகையில், வேலை அளிப்பதை உத்தரவாதம் செய்!
3. நகர்புற வேலை உறுதிச் சட்டத்தை இயற்று.

ஏஅய்சிசிடியு - அவிகிதொச

தமிழ்நாடு

## தூய்மைப் பணி தனியாருக்குத் தாரை வார்ப்பு எதிர்த்து ஏஐசிசிடியு போராட்டம்

கோவையில் தூய்மைப் பணியாளர்கள் குறைந்தபட்ச ஊதியம் கேட்டு பல கட்டப் போராட்டங்கள் நடத்தி அரசும் மாநகராட்சி நிர்வாகமும் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட ஊதிய உயர்வை வழங்காமல் தொழிலாளர்களுக்கு துரோகம் செய்துவிட்டன. போராட்டம் நடைபெற்ற போதே 152 அரசாணை போட்டு வேலைநிறுத்தத்தைத் தடுத்த அரசு, தொடர்ந்து தூய்மைப் பணியை தனியாருக்கு (அவுட்சோர்சிங்) டெண்டர் விட அறிவிப்பு வெளியிட்டு பேரிடியை தொழிலாளர்கள் மீது இறக்கியது. அதுவுமின்றி குப்பைகளைச் சேகரிப்பது, தரம் பிரிப்பது என வேலைப் பளுவை அதிகரித்து, ஊதியத்தைக் குறைத்து, தொழிலாளர்களைச் சுரண்டிக் கொள்ளையடிப்பார்கள். டெண்டருக்கு ஒதுக்கிய தொகை மட்டும் ரூ 170.65 கோடி. நிரந்தர தொழிலாளர்களுக்கு வேறு பணிகள் வழங்கி விட்டு, ஒப்பந்தப் பணியாளர்களை தனியார் அவுட்சோர்சிங் நிறுவனத்திற்கு மாற்றுகிறார்கள். தொழிலாளர்கள் எதிர் காலம் கேள்விக்குறியாகிறது. இதனால் பொதுமக்களுக்கான சுகாதாரமும் தனியார் கைகளில்தான் இருக்கும். சேவை என்பது போய் கொள்ளை என்பதாக மாறும். அவுட்சோர்சிங் முறையை முழுமையாக கைவிட வலியுறுத்தி மார்ச்7 அன்று மாநகராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடை பெற்றது. வரும் மார்ச் 23 அன்று குறைந்தபட்ச ஊதியத்தை உடனே வழங்கக் கோரியும் அவுட்சோர்சிங் முறையைக் கைவிடக் கோரியும் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஏஐசிசிடியு நடத்த உள்ளது.



# விசைத்தறி தொழிலாளர்களின் கூலி உயர்வு மேம்பட்ட பணி நிலைமைகள் வாழ்வாதாரத்துக்கான போராட்டங்கள் தொடரும்.

தமிழ்நாட்டில் விசைத்தறி முக்கிய வேலை அளிக்கும் தொழிலாக உள்ளது. குறிப்பாக நாமக்கல், சேலம் மாவட்டங்களில் பல்லாயிரக்கணக்கானோர் பணிபுரியும் விசைத்தறிக் கூடங்கள் உள்ளன. தமிழ்நாட்டிற்கு செலவானியையும் வேலைவாய்ப்பையும் உரு வாக்கித் தருவதால் தமிழக அரசு விசைத்தறி உற்பத்திக்கு மட்டுமே என சில துணி ரகங்களை ஒதுக்கீடு செய்துள்ளது. அதேபோல் பாரம்பரிய தொழிலான கைத்தறி உற்பத்திக்கு என்று சில ரக துணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் இத்தொழிலை பாதுகாப்பதாகச் சொல்லப்படுகிறது. தமிழக அரசு விசைத்தறிக் கூடங்களுக்கென இலவசமாக மின்சாரமும் வழங்குகிறது. உற்பத்தியைப் பெருக்க விசைத்தறி இயந்திரங்கள் தொடர்ந்து நவீன மயமாக்கப்பட்டும் வருகின்றன.

பெரும்பாலான ஜவுளி உற்பத்தியாளர்கள் விசைத்தறிக்கூடங்களை அடைப்பு தறி முதலாளிகள் என்று அழைக்கப்படுபவர்களிடம் குத்தகைக்கு விடுகின்றனர். அடைப்புத்தறி முதலாளிகள் விசைத்தறி தொழிலாளர்களைப் பணிக்கமர்த்தி உற்பத்தியில் ஈடுபடுத்துகின்றனர். அவர்கள் தான் தொழிலாளர் களுக்கு கூலி வழங்குகின்றனர். இது இல்லாமல் நேரடியாக ஜவுளி உற்பத்தியாளர்களே நடத்தும் விசைத்தறிக்கூடங்களும் உண்டு. தானியங்கி தறிக் கூடங்களும் வந்திருக்கின்றன. அரசால் ஊக்குவிக்கப்படு கின்றன. அதைத் தொடர்ந்து உழைப்புச் சக்தி அடர்ந்த விசைத்தறித் தொழில் நசிந்து வருகிறது என்பதும் கூட கவனிக்கப்படவேண்டியது.

விசைத்தறிக்கூடங்கள் தொழிற்சாலை சட்ட வரம்புக்குள் வராது என சொல்லிக்கொண்டு முதலாளிகள் எவ்வித சட்டங்களையும் நடை முறைப்படுத்துவதில்லை. விசைத்தறித் தொழிலா ளர்கள் மிக மோசமான பணி நிலைமைகளில் வேலை செய்கின்றனர். குடிநீர், கழிப்பிட வசதிகள் கூட முறையாக செய்து தரப்படுவதில்லை. 'பாக்கி' முறை என்னும் கொத்தடிமை முறை நிலவி வருகிறது. அடைப்புத்தறி முதலாளிகள் ஒரு தொகையை முன்பணமாக கொடுத்து தொழிலாளர்களை பணிக்கமத்துவர். அந்த அசல் தொகையை திருப்பி செலுத்தும் வரை சம்பந்தப்பட்ட தொழிலாளி அந்த முதலாளியிடம்தான் வேலை செய்தாக வேண்டும். தொழிலாளியின் விருப்பப்படி தனது வேலையை மாற்றிக் கொள்ள முடியாது. உழைப்பை யாரிடம் வேண்டுமானாலும் விற்கும் சுதந்தரம் தொழிலாளரிடமிருந்து பறிக்கப்படுகிறது. இது ஒரு விதமான கொத்தடிமைத்தனமாகும். இத்தகைய கொத்தடிமை வேலை நிலைமைகளுக்கு மத்தியில் பணியாற்றும் தொழிலாளர்கள் மிகக்கடும் வாழ்வாதார நெருக்கடியில் சிக்கிக்கொண்டுள்ளனர். அவர்களை விடுவிக்க அரசு எந்த முயற்சியும் எடுப்பதில்லை.

தொழிலாளர்களின் வறுமை சூழல் காரணமாக சிறுநீரகத்தை விற்பதும் பெண்கள் கருமுட்டைகளை விற்பதும் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. தொழிலா ளர்கள் கந்து வட்டிக்காரர்களின் அபரிமித வட்டி கொள்ளையில் சிக்கி தவித்து வருகின்றனர். சிலஆண்டுகளுக்குமுன்னால், கந்து வட்டிக் கொடுமைக்கு எதிராக பிரச்சாரத்தில் ஈடுபட்ட, தற்போதைய ஏஐசிசிடியு தலைவரும் சிபிஐ (எம்எல்) மாநிலக் கமிட்டி உறுப்பினருமான தோழர் பொன்.கதிரவன் கொடூரமான கொலை வெறித்தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டார்.

அனைத்துப் பொருட்களின் விலையும் கடுமையாக உயர்ந்து விட்டன. ஆனாலும், கடந்த 7 ஆண்டுகளாக குமாரபாளையம் பகுதியில் விசைத்தறி தொழிலாளர்களின் கூலி உயர்த்தப்படவே யில்லை. தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் துணி ரகங்களுக்கு ஏற்றார் போலும், உற்பத்தி செய்யும் அளவுக்கு ஏற்றார் போலும் கூலி பெறும் (பீஸ்ரேட்) முறை நடைமுறையில் உள்ளது. தொழிலாளர்களுக்கு வாராந்திர முறையில் உற்பத்தி செய்த அளவிற்கேற்ப கணக்கிடப்பட்டு கூலி வழங்கப்படுகிறது. நாள் ஒன்றுக்கு 12 மணி நேரம் வேலை செய்யும் ஒரு தொழிலாளி சராசரியாக ரூபாய் 10,000தான் மாதச் சம்பளமாக பெறமுடிகிறது.

குறைந்தபட்ச போனஸ் தொகை பெறுவதற்கு ஒவ்வொரு ஆண்டும் தொழிலாளர்கள் போராட வேண்டியுள்ளது. விசைத்தறித் தொழிலாளர்களின் கோரிக்கைகளை முன்னெடுக்கும் முன்னணி சங்கமாக ஏஐசிசிடியு எப்போதுமே இருந்து வந்துள்ளது. பல சந்தர்ப்பங்களில் கூலிப் போராட்டங்கள் தன்னெழுச்சியாக வெடிப்பதுண்டு. அப்படிப்பட்ட தன்னெழுச்சியான போராட்டங்கள் தவிர்க்க இயலாமல் சட்ட ஒழுங்குப் பிரச்சனையாக மாறுவதுண்டு. போராட்டம் துவங்கிய பிறகு ஏஐசிசிடியு உள்ளிட்ட அனைத்து சங்க கூட்டுக் குழு உருவாக்கப்பட்டு அக்குழு போராட்டங்களை வழிநடத்துவது என்பது நடக்கும். விசைத்தறித் தொழிலாளர் பிரச்சினைகளில் தொழிலாளர் துறை தலையீடு என்பது இருந்ததே இல்லை.

பல சந்தர்ப்பங்களில் அடைப்புத்தறி முதலாளிகள் அவர்களுக்கான கூலி உயர்வு கேட்டு தறிக் கூடங்களை அடைத்து போராட்டத்தில் ஈடுபடுவர். அவர்கள் தங்கள் போராட்டத்திற்கு ஆதரவாக தொழிலாளர்களையும் பிற சங்கங்களையும் அணி திரட்டிக் கொள்கிறார்கள். அடைப்புத்தறி முதலாளிகள் தாங்கள் பெறும் கூலி உயர்வில் ஒரு பகுதியை தொழிலாளர்களுக்கு கொடுப்பதாக வாக்குறுதியும் அளிப்பார்கள்.ஆனால் அந்த வாக்குறுதி நடைமுறைப்படுத்தப்படுவது அரிதாகவே நடக்கும். அடைப்புத்தறி முதலாளிகள் பெரும்பாலும் கிராமப்புற செல்வந்தர்களாகவும் குலக் பிரிவைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பதை பல இடங்களில் காண்கிறோம். அவர்கள் பல்வேறு முதலாளித்துவக் கட்சிகளின் தலைவர்களாகவும் இருக்கிறார்கள்.

சமீபத்தில் ஏஐசிசிடியு, குமாரபாளையம் விசைத்தறித் தொழிலாளர்கள் மத்தியில் மேற்கொண்ட பிரச்சார இயக்கத்தின் விளைவாக, அவர்களின் கூலி உயர்வு கோரிக்கை முன்னுக்கு வந்தது. தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆயத்தமானார்கள். குமாரபாளையம், பள்ளிப்பா ளையம் பகுதிகளை விசைத்தறி நகரங்கள் என்றே கூறலாம். வீதிக்கு வீதி ஏராளமான விசைத்தறி கூடங்கள் இங்கு உள்ளன. பெரும்பான்மை தொழிலாளர்கள் ஆதரவு பெற்ற முதன்மைச் சங்கமாக ஏஐசிசிடியு இங்கு பல்லாண்டுகளாகசெ யல்பட்டுவருகிறது.

ஜவுளி உற்பத்தியாளர்கள், அடைப்புத்தறி முதலாளிகள், தொழிற்சங்கத் தரப்பினர் ஆகியோரை அழைத்து முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்யுமாறு குமாரபாளையம் தாசில்தார் அலுவலகத்தில் ஏஐசிசிடியு சங்கம் மனு கொடுத்தது. அதன் மீதான நடவடிக்கை தாமதப்படுத்தப்பட்ட போது, ஏஐசிசிடியு அறைகூவலை ஏற்று, தொழிலாளர்கள் தாங்களாகவே விசைத்தறிக்கூடங்களை மூடி வேலை நிறுத்தத்தை துவக்கி விட்டார்கள். தினமும் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் தாசில்தார் அலுவலக வாயிலில் திரண்டு முழக்கமிட்டனர். அதைத் தொடர்ந்து அனைத்து தொழிற்சங்க கூட்டுக் குழு உருவாக்கப்பட்டு அதன் சார்பில் நடத்தப்பட்ட பேரணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கு பெற்றதும் நடைபெற்றது.

போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர அதிமுகவின் சட்டமன்ற உறுப்பினர் திரு.தங்கமணி, திமுகவின் குமாரபாளையம் நகர்மன்றத் தலைவர் என பலரும் தலையிட துவங்கினர். இதற்கு விசைத்தறி தொழிலாளர்கள் ஒரு மிகப்பெரும் வாக்கு வங்கி என்பது முக்கிய காரணமாகும். ஆளும் கட்சியின் குமாரபாளையம் நகர் மன்றத் தலைவர் முத்தரப்பு பேச்சு வார்த்தைக்கு ஏற்பாடு செய்தார். அனைத்துத் தரப்பினரும் அதில் பங்கேற்றனர். ஏஐசிசிடியு சார்பில் மாநிலச் செயலாளர் தோழர் சுப்பிரமணி, சிபிஐ (எம்எல்) கட்சியின் மாவட்டச் செயலாளர் தோழர் பொன். கதிரவன் ஆகியோர் கலந்து கொண்டனர். பேச்சுவார்த்தையில் அடைப்புத் தறி முதலாளிகளுக்கு 15% கூலி உயர்வு வழங்குவது என்றும் அடைப்புத்தறி முதலாளிகள் தொழிலாளர்களுக்கு 20% கூலி உயர்வு வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் காரணமாக ஒருமாதத்திற்கும் மேலாக நடைபெற்ற வேலை நிறுத்தப்போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. ஆனால்,இதுபோன்று போடப்படும் ஒப்பந்தங்களை அமலாக்க சட்ட அங்கீகாரம் இல்லாததால் எப்போதுமே அனைத்து விசைத்தறிக்கூடங்களிலும் ஒப்பந்தம் நடைமுறைக்கு வருவது என்பது சிரமமான காரியமாகவே இருந்து வந்துள்ளது.

அதேபோல் அருகில் உள்ள, மற்றொரு விசைத்தறி மையமான, பள்ளிப்பா ளையத்தில் கூலி உயர்வு கேட்டு போராட்ட வியூகங்கள் துவங்கி உள்ளன. அனைத்து தொழிற்சங்கங்களும் தனித்தனியே வேலை நிறுத்த அறிவிப்பு கொடுத்துள்ள நிலையில், வருவாய்த் துறை அதிகாரிகள் துவக்கி உள்ள பேச்சு வார்த்தையில் ஏஐசிசிடியு உள்ளிட்ட சங்கங்கள் பங்கெடுத்து வருகின்றன. பேச்சுவார்த்தை தொடர்கிறது. ❐

**ஏஐசிசிடியு முன் வைக்கும் கோரிக்கைகள்**

◆விசைத்தறித் தொழிலுக்கான அனைத்து சட்ட திட்டங்களையும் முறையாக அமல்படுத்து!

◆'பாக்கி' எனும் பெயரில் நடக்கும் கொத்தடிமை முறைக்கு முடிவு கட்டு!

◆விசைத்தறிக் கூடங்களில் அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடு!

◆தொழில் தாவாக்களில் தொழிலாளர் துறையின் செயல்பாட்டை உத்திரவாதம் செய்!

◆அனைத்து தொழிலாளர் குடும்பங்களுக்கும் வாழத் தகுந்த வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடு!

◆சிறுநீரக விற்பனை, கருமுட்டை விற்பனை போன்ற சமூக கொடுமைகளுக்கு முடிவு கட்டு!

◆டாஸ்மாக் கடையை இழுத்து மூடு!

◆விசைத்தறித் தொழிலாளர்களின் கவுரவமான கூலி, பணிநிலை, வாழ்வாதாரம் ஆகியவற்றை உத்தரவாதம் செய்!

◆புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் பாதுகாப்பை, நலன்களை உத்தரவாதம் செய்!

# திரிபுராவில் பாஜக குண்டர்கள் நடத்தும் வன்முறையைக் கண்டித்து சிபிஐ(எம்) நடத்திய ஆர்ப்பாட்டத்தில் சிபிஐ(எம்எல்)

திரிபுராவில் பாஜக மீண்டும் ஆட்சியைப் பிடித்ததைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகள் மீது குறிப்பாக இடதுசாரி கட்சியினர் மீதும் அலுவலகங்கள் மீதும் பாஜக குண்டர்கள் தாக்குதல் நடத்தி வன்முறையில் ஈடுபட்டு வருகிறார்கள். சிபிஐ(எம்) கட்சி மட்டுமின்றி சிபிஐ(எம்எல்) கட்சியின் முன்னணி தோழர்களின் வீடுகள் தோட்டங்கள் ஆகியவற்றைத் தாக்கியுள்ளார்கள். பாஜக குண்டர்களின் வன்முறையாட்டத்தைக் கண்டித்து சென்னையில் 13.3.2023 அன்று சிபிஐ(எம்) மாநிலச் செயலாளர் தோழர் பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் இகக(மாலெ) தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். இகக(மாலெ) மாநிலக்குழு உறுப்பினர் தோழர் இரணியப்பன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.



# கன்னியாகுமரி மாவட்ட ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் ஏஐசிசிடியு

**சிம்சன் - அந்தோணிமுத்து**

கன்னியாகுமரி மாவட்டத்தின் ரப்பர் தோட்டங்களின் வரலாறு ஒரு நூற்றாண்டுக்கு முந்தையது. ஜான், ஜோசப் மர்பி என்ற ஐரிஷ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 1902 ஆம் ஆண்டு அப்போது திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் ஒரு பகுதியாக இருந்த கேரளாவின் கோட்டய மாவட்டத்தில் ரப்பர் தோட்டங்ளை அறிமுகப்படுத்தி பயிரிட்டனர். கிட்டத்தட்ட ஒரு லட்சம ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் பயிர்கள் பயிரிடப்பட்டன. இத்தோட்டத்தில் சுமார் 3 லட்சம் பேர் தொழிலாளர்களாகப் பணியில் சேர்ந்தனர். இவர்கள் மறைமுகமாகவும் நேரடியாகவும் வேலை வாய்ப்பு பெற்றனர்.



1942 ஆம் ஆண்டு முதல் தொழிற்சங்கமான அனைத்து திருவிதாங்கூர் எஸ்டேட் தொழிலாளர் சங்கம் உருவானது. அனறைய கால கட்டத்தில் தொழிலாளர் உரிமைனை வென்றெடுப்பதில் தொழிற் சங்கங்கள் முக்கிய பங்காற்றின. நியாயமான ஊதியம் பெறத் தொழிற் சங்கங்கள் வரலாற்றுப் போராட்ங்ளை நடத்தின. தொடர்ந்து உரிமைப் போராட்டங்கள் தொழிலாளர்களால் 1942 ல் ஆங்கிலேயர்ளை உரிமையாளர்களாகக் கொண்ட ரப்பர் தோட்டங்களில் நடத்தப்பட்டன. அக்கால கட்டத்தில் ரப்பர் தோட்டத் தொழி லாளர்கள் கடுமையான சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டனர். சுதந்திரத்திற்கு முன் விபத்து, நியாயமான ஊதியம் இல்லாமை, தொற்று நோய், பாம்பு கடி ஆகியவற்றால் இறந்தவர்களின் எண்ணிக்கை பற்றி எந்தத் தரவுகளும் இல்லை.

பின்னாளில் தொழிலாளர்ளை அமைப்பாக்குவதில் கம்யூனிச மற்றும் சோசலிச அமைப்புகளின் தலைவர்கள் முன் முயற்சி எடுத்தனர். கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் கிளை உறுப்பினரான ஜி.எஸ். மணி 1942 ல் அனைத்து திருவிதாங்கூர் தோட்டத் தொழிலாளர்கள் சங்கத்தை சிவலோகம் தோட்டத்தில் உருவாக்கினார். ரப்பர் தோட்டங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குப் பகுதியில் உள்ள விளவங்காடு தாலுகாவிலிருந்து மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டி தேவாளை தாலுகா வரை விரிவடைந்தது.

1956 மொழி வாரி மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. அந்த ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிலாளர் சங்கம் (கேடிஎப்டிடபிள்யுயு) உருவானது. பின்னர் இச்சங்கம் ஏஐடியுசி சங்கத்தோடு இணைக்க ப்பட்டது. 1970 வாக்கில் சிஐடியு சங்கம் உருவாக்கப்பட்டது. இச்சங்கங்கள் சிறந்த

வேலை நேரம், நிரந்தர வேலை, சமூக நடவடிக்கைகள் ஆகியவற்றிற்காக வேலை நிறுத்தப் போராட்டங்களை ந ட த் தி ய து . த னி யா ர் தோட்நகளிலும் இப்போராட்ங்கள் எதிரொலித்தன. 1960 ல் தனியார் தோட்டங்களின் பரப்பளவு கூடியது. 1962 ல்தொழிலாளர்களின் பாத யாத்திரை கடையாறு முதல் நாகரகோவில் வரை நடந்த்து. 1972 / 73 ல் அம்பாடி தோட்டத்தில் நடந்த போராட்டம் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டமாக நடந்தது. இப்போராட்டங்களின் மையக் கோரிக்கையே சம்பள உயர்வுக்கானது தான்.

அரசு ரப்பர் கார்ப்பரேஷன் என்பது தமிழக அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறையின் கீழ் இயங்கும் பொது நிறுவனமாகும். 20.09.1984 ல பதிவு செய்யப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்காகவும், இலங்கையிலிருந்து

தாயகம் திரும்பிய அகதிளைத் தத்தெடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவும் தொடங்கப்பட்ட நிறுவனமே அரசு ரப்பர் கார்ப்பரேஷனாகும். இது ஐ.எஸ்.ஐ 90012008 சான்றிதழ் பெறப்பட்டது. இயற்கை ரப்பரை உற்பத்தி செய்து பதப்படுத்திய பின் நுகர்வோருக்கு மூல ரப்பராக விற்பனை செய்வதே இந் நிறுவனத்தின் முக்கியச் செயல்பாடாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் 4160.78 ஹெக்டேர் பரப்பளவில் ரப்பர் சாகுபடி செய்யப்பட்டது. துவக்கத்தில் இந் நிறுவனம் பட்டியலிடப்படாத பொது நிறுவனமாகும். பின்னர் ஆகஸ்ட் 10, 1984ல் பொது நிறுவன மாக வரையறுக்கப்பட்டுள்ளது. இதன் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ஐ.என்.ஆர் 13.07 கோடியாகும்.

தமிழக அரசால் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு மிகவம் பின்னடைவு ஏற்பட்டது. தமிழக அரசு ரப்பர் தோட்டத் தொழிலாளர்ளை அலட்சியப்படுத்தியது. ரப்பர் மரங்கள் பலனளிக்கவில்லை எனச் சொல்லி சுமார் 1000 ஹெகடேர் நிலத்தில் உள்ள ரப்பர் மரங்ளை வனத்தறையிடம் ஒப்டைத்து விட்டது, அதில் பணி புரிந்த தொழிலாளர்களுக்கு எந்தவொரு வேலை பாதுகாப்புமின்றி கைவிடப்பட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். மேலும் ரப்பர் சார்ந்த பொருட்களை இறக்குமதி செய்வதற்கான விதி முறைகள் தள்ர்த்தப்பட்டதன் காரணமாக தொழில்துறை பாதிப்படைந்துள்ளது. 1951ல் கொண்டு வரப்பட்ட தோட்டத் தொழிலாளர் சட்டம் மற்றும் 2006 ல் கொண்டு வரப்பட்ட வனச் சட்டம் ஆகியவற்றால் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு மற்றும் சம்பளம் என்பது முறையாக கிடைக்கப்படாததால் அவர்களது வாழ்வாதாரம் கேள்விக்குறியாவே இருக்கிறது.

வனச்சட்டத்தின் அடிப்படையில் தனியார் தாங்கள் வைத்திருக்கும் 5 செண்ட் முதல் 50 செண்ட் வரை உள்ள நிலங்களில் பயிரிட்ட ரப்பர் மரங்ளை முறையாகக் கண்காணிக்கவும் பராமரிக்கவும் முடியவில்லை. வனச்சட்டத்தின் படி அந்த நிலங்களை யாரிடமும் விற்கவோ அல்லது அடமானம் வைக்கவோ முடியாது. உற்பத்தி செய்யப்படாத மரங்ளை வெட்டக்கூட அனுமதி இல்லை. இதனால் இச்சிறு உற்பத்தியாளர்கள் தங்களின் அத்தியாவசியத் தேவைகளுக்குக் கூடத் துன்பப்படுகிறார்கள். இவர்களின் பெரும்பானமயோர் மாற்றுத் தொழில் செய்யும் தொழிலாளர்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

இதன் மறுபக்கத்தில் பெரும முதலீட்டாளர்களின் எஸ்டேட்டுகளில் அரசு நிர்ணயித்துள்ள ரு 720 தினக் கூலியைக் கூட வழங்காமல் குறைந்த ஊதியத்தில் தொழிலாளர்ளைச் சுரண்டி வருகின்றனர். சம்பள உயர்வுக்காகப் போராடிய இடதுசாரி சங்கங்களும் தறபோது இதில் அக்கறை காட்டுவதில் மிகப்பெரும் தொய்வு ஏற்பட்டுள்ளது. தனியார் முதலாளிகளின் நலனைக் கருத்தில் கொணடே அரசு ரப்பர் கழகமும் தொழிலாளர்களுக்கு சம்பளத்தைக் கூட்டிக்கொடுப்பதில் சிரத்தையின்றி உள்ளது.

அரசின் ரப்பர் கழகத்தில் நிரந்தர வேலை மருத்துவ சிகிச்சை, பணிக்கொடை, வருங்காலவைப்பு நிதி மற்றும் ஊழியர் காப்பீடு (இ.எஸ்.ஐ) ஆகியன இருந்தும் இவை அனைத்திலும் தொழிலாளர்களுக்குப் பிரச்சனைகள் உள்ளன. ஆனால் தனியார் முதலாளிகளின் எஸ்டேட்டுகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலை என்பது உத்திரவாதமில்லை. ஊழியர் காப்பீடு (இ.எஸ்.ஐ) அறவே இல்லை. வருங்கால வைப்பு நிதி இருப்பினும் நிரந்தர வேலை என்பது இங்கு ஊசலாட்டமாக இருப்பதால் வைப்புநிதி என்பது எதிர்காலத்திற்கு ஏற்றதாக இல்லை. அரசு மற்றும் தனியார் ரப்பர் தோட்டத் தொழிலாளர்களின் வசிப்பிடம் எந்த வசதியுமின்றி கேட்பாரற்றுக் கிடக்கிறது. சாலை வசதிகள் இல்லை. குடி தண்ணீர் வசதி இல்லை. சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகள் என்பது இவர்களுக்கு எட்டாக் கனியாவே உள்ளது.

தற்போது அரசு ரப்பர் கழகத்தில் சுமார் 2000 தொழிலாளர்கள் பணி புரிகின்றனர். இங்கு ஊழியர் காப்பீடு (இ.எஸ்.ஐ) மற்றும் மருத்துவனை அதற்குரிய மருத்துவர், செவிலியர் இல்லை என்பதை வலியுறுத்தி புரட்சிகரத் தொழிற் சங்கமான ஏஐசிசிடியு வழக்கு ஒன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது. ஏஐசிசிடியு தொழிற்சங்கத்தின் அகில இந்திய தலைவர் தோழர் வீ.சஙகர், மாநில தலைவர் சங்கர பாண்டியன் மற்றும் மாநில தணைத் தலைவர் அநதோணிமுத்து ஆகியோர் நாகர்கோவில் கீரிப்பாறையில் இயங்கி வரும் அரசு ரப்பர் கழகத்திற்கு சனவரி 18 ந்தேதி சென்று அங்கு பணிபுரியும் ரப்பர் தோட்டத் தொழிலாளர்ளைச் சந்தித்தனர்.

# ரப்பர் தோட்டத் தொழிலாளர் மத்தியில் ஏஐசிசிடியு அகில இந்திய தலைவர் வீ. சங்கர் பேசிய உரையின் சுருக்கம்

நீண்ட காலமாக சில பத்தாண்டுகளுக்கு மேல் பணிபுரியும் நிரந்தர தொழிலாளர்களும் ஒப்பந்த மற்றும் முறைசாராதொழிலாளரகளும் அரசு ரப்பர் கழகத்தில் பணி புரிந்து வருகிறீர்கள். அரசு அறிவித்துள்ள குறைந்த பட்ச சம்பளம் கூட உங்களுக்கு கிடைக்கவில்லை. பக்கத்து மாநிலமான கேரளாவில் குறைந்த பட்ச சம்பளம் என்பது தமிழ்நாடு அரசு அறிவித்த சம்பளத்தை விட மிக அதிகமாக வழங்குகிறது. தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அறிவித்த சம்பளம் ரூ715 எனச் சொல்லப்படுகிறது. ஆனால் ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் கூலி வெறுமனே ரூபாய் 450 தருவது என்பது சட்ட விரோதமானதாகும். ஒவ்வொரு ஆண்டுக்கும் சர்வீஸ்வெயடேஜ் நளொன்றுக்கு ரூபாய் 100 என அதிகரித்தால் கூட 40 ஆண்டுகள் பணிபுரிபவருக்கு மாதம் இப்போது 40000 க்கும் மேல் கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஆனால் தறபோது உங்களுக்கு ரூபாய் 12 ஆயிரத்திற்குள் தான் சம்பளம். அரசு ரப்பர் கழகம் என்பது தனியார் நடத்தும் முதலாளியால் இயக்கப்படவில்லை. தமிழக அரசுதான் இந்த ரப்பர் கழகத்தை நடத்துகிறது என்றால் இங்கு பணி புரியும் தொழிலாளர்கள் அனைவரும் அரசு ஊழியர்கள்தான். அரசு ரப்பர் கழகத்தின் கீழ் அல்லது அது சம்பந்தப்பட்ட வேலகள்செய்யும் எந்த தொழிலாளியாக நிரந்தரமாக இருந்தாலும் காண்ட்ராக்ட் தொழிலாளியாக இருந்தாலும் சட்டப்படி அவர்கள் ரப்பர் கழக தொழிலாளர்கள் தான் ரப்பர் கழகத்தை நடத்துவது அரசு என்பதால் ரப்பர் கழக தொழிலாளர்கள் னைரையும் அரசு ஊழியர்களாக அறிவித்திட வேண்டும் என நாம் கோரிக்கை விடுக்க வேண்டும். ஏஐசிசிடியு இந்த கோரிக்கைக்காகப் போராடும். குறைந்த பட்ச ஊதியத்தின் கீழ் சம்பளம் வழங்குவது கொத்தடமை மறைக்கு நிகரானது என அறிவுறுத்துகிறது உச்ச நீகிமன்றம். குறைந்த பட்ச ஊதியம் வழங்க இயலாது எனச் சொல்லும் நிறுவனங்கள் தொழில் நடத்த அருகதை அற்றவை என்றும் சொல்கிறது. குறைந்தபட்ச ஊதியம் என்பது வேலை செய்யும் அனைத்து தொழிலாளர்களுக்கும் காண்ட்ராக்ட் தொழிலாளர்கள் உள்பட அனைவருக்கும் பொருந்தும். இ.எஸ்.ஐ அல்லது சுகாதார இன்சூரன்ஸ் என்பது னைத்து தொழில் நிறுவனங்களும் தமது னைத்து தெழிலாளர்களுக்கும் வழங்கயே தீர வேண்டும் என்பது சட்டம். ஆனால் அந்த இ.எஸ்.ஐ ரப்பர் கழகத்தில் வலை செய்யும் தொழிலாளர்களுக்கு இந்த சமூகப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்பது சட்ட வரோதமாகும். அரசு உருவாக்கிய சட்டத்தை அரசே செயல்படுத்தவில்லை. இது வேலியே பயிரை மேய்ந்த்தாகும். வேலையை விட்ட அல்லது பணி மூப்பு பெற்ற அல்லது வேலையிலிருந்து வெளியேற்றப்பட்ட அனைவருக்கும் பணிக் கொடை (gratuity) வழங்கப்பட வேண்டும் என்பது சட்டம். குறைந்த பட்சம் வேலை செய்த ஒவ்வொரு ஆண்டுக்கும் 15 நாள் சம்பளம் என கணக்கிட்டால் 30 ஆண்டு பணியாற்றியவருக்கு 450 நாள் சம்பளம் வழஙகப்பட வேண்டும். ஆனால், இங்கு எதுவும் கிடையாது என்று பொருள் என்பது சட்ட மீறல் ஆகும். ஆண்டுக்கு 10 நாட்கள் தேசிய மற்றும் பண்டிகை விடுப்பு வழங்கப்பட வேண்டும். அதிலும் இங்கு ஒன்பது நாட்கள் தான் கொடுக்கப்படுகிறது. அந்த விடுப்பும் சம்பளத்துடன் கூடியதாக இருக்க வேண்டும். சம்பளத்துடன் கூடிய வார விடுமுறை வழங்கப்பட வேண்டும். 20 நாள் வேலை செய்தால் ஒரு நாள் சம்பளத்துடன் கூடிய ஒரு நாள் விடுப்பு அல்லது சம்பளம் வழஙகப்பட வேண்டும். சம்பளத்துடன் கூடிய வார விடுமுறை கொடுத்தே தீர வேண்டும். அடிப்படை வசதிகள், குறிப்பாக வீட்டுமனை தருவது அல்லது வீடு கட்டித் தருவது அரசின் கடமை. இது கூட தொழிலாளர்கள் எழுப்ப வேண்டிய மிக முக்கியமான கோரிக்கை ஆகும்.

அகில இந்திய அளவில் 11 தொழிற்சங்கங்கள் தான் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள். அந்த 11 சங்கங்களில் ஒன்று ஏஐசிசிடியு. அகில இந்திய தொழிற்சங்க மைய கவுன்சில் என தமிழில் அழைக்கப்படுகிறது. நாடு முழுக்க இருக்கிற, BMS தவிர்த்த, அனைத்து சங்கங்களும் இணைந்து தொழிலாளர் உரிமைகளுக்காக, பணி நிரந்தரத்துக்காக, அதிக ஊதியத்துக்காக,

சமூக பாதுகாப்பிற்காக, 4 தொழிலாளர் விரோத சட்டத் தொகுப்புக்கு எதிராக எண்ணற்ற போராட்டங் களையும், வேலை நிறுத்தங்களையும் நடத்தி இருக்கிறது. வருகிற ஜனவரி 30 அன்று நாடு தழுவிய தொழிலாளர் மாநாடு ஒன்றை டெல்லியில் நடத்த இருக்கிறது. நாடு முழுக்க தோட்டத் தொழிலாளர்களை நாம் சங்கத்தில் அணிதிரட்டி வருகிறோம். அஸ்ஸாம், மேற்கு வங்கத்தில் தேயிலை தோட்ட தொழிலாளர்களின் பலமிக்க சங்கமாக ஏஐசிசிடியு திகழ்கிறது.

இது மட்டுமல்ல துப்புரவு பணியாளர்கள் மத்தியிலும் நாம் அவர்களது பணி நிரந்தரம் சம்பளம் ஆகியவற்றிற்காக போராடி வருகிறோம். கோவையில் நாம் சமீபத்தில் இதர சங்கங்களோடு இணைந்து நடத்திய போராட்டத்தின் மூலம் அவர்களுக்கு ரூ 648 ஒரு நாள் ஊதியமாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதை உடனடியாக ரூபாய் 721 ஆகவும், நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளமாக உயர்த்திட வேண்டும் என போராடி வருகிறோம்.

சமீபத்தில் சென்னை வண்டலூர் உயிரியல் பூங்காவில் மிகப்பெரிய போராட்டம் நடத்தியுள்ளோம். பொங்கல் தினத்தை ஒட்டி போராட்டம் நடத்தப்பட்டது. பஞ்சிங் முறைக்கு எதிராக சில நாட்கள் நடந்த போராட்டம், முதல் கட்டமாக, 46 பேருக்கு நிரந்தர பணி தருகிற உத்தரவாதம் பெற்ற பின் முடிந்து இருக்கிறது. வருங்காலங்களில், இதர தொழிலாளர்களையும் படிப்படியாக நிரந்தரம் செய்வதாக அறிவிப்பையும் பெற்றிருக்கிறது. இந்த போராட்டத்தை நமது ஏஐசிசிடியு சங்கத்தின் மாநில சிறப்புத் தலைவர் இரணியப்பன் தலைமையேற்று நடத்தினார்.

தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளை பெற நாம் எந்த முதலாளிகளிடமும் கெஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. இந்த உரிமைகள் அனைத்தும் நமது முன்னோர்கள் உயிரைக் கொடுத்து போராடியதின் விளைவாக பெற்றதுதான். நாம் நமது உரிமைகளை பெற தொழிலாளர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். போராட்டப் பாதையை, போராட்ட சங்கத்தை தேர்வு செய்ய வேண்டும். நாம் போராடித்தான் நமது உரிமைகளை பெற முடியும். காலில் விழுந்து, உரிமைகள் விற்கப் பட்டிருக்கிறதே தவிர, உரிமைகளைப் பெற்றதாக வரலாறு இல்லை. போராட்டம் தான் ஒரே பாதை.

உறுதியோடு போராடுவோம்!

உரிமைகளைப் பெற்றிடுவோம்!

# டிஎன்சிஎஸ்சி- ஏஐசிசிடியு ஆர்ப்பாட்டம்

பொது விநியோகத்தை தனியார் மயமாக்கும் திட்டத்தைக் கைவிடக் கோரியும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிபுரியும் சுமைப்பணிதொழிலாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தியும் தமிழ்நாடு முழுவதும் ஏஐசிசிடியு உள்ளிட்ட 6 சங்கங்களின் சார்பாக 9.3.2023 அன்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இந்த ஆர்ப்பாட்டங்களில் சங்கத்தின் மாநிலத் தலைவர் தோழர் டி.சங்கரபாண்டியன், மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் கோவிந்தராஜ், தோழர்கள் சிவராமன், கணேசன், ஐயப்பன் வேல்முருகன் உள்ளிட்ட ஏஐசிசிடியு தோழர்கள் கலந்து கொண்டனர்



# தோள் சீலைப் போராட்டம் 200 ஆண்டுகள்: போராட்டம் தொடர்கிறது!

**– இளவழகன்**

தோள் சீலைப் போராட்டம், மானுட மாண்பை, பெண்களது தன் மானத்தை மீட்டுக் கொள்வதற்கான உரிமைப் போராட்டம். சமுதாயத்தின் சரிபாதி பெண்களது இந்தப் போராட்டம் மொத்த சமுதாயத்தின் போராட்டமாகும். இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த பற்றிப் படர்ந்த உக்கிர மிகுந்த இந்தப் போராட்டம், ஆகச்சிறந்த பண்பாட்டு, அரசியல், பொருளாதாரப் போராட்டமாகும்.

உயர்சாதிப் பெண்கள் தவிர்த்த 18 கீழ்ச் சாதிப் பெண்கள் (வருணதர்ம பாகுபாட்டின்படி) மேலாடை அணிவது தடை செய்யப்பட்டிருந்தது. மேலாடை அணிவது குற்றமாக்கப்பட்டிருந்த அந்த காலத்தில் மீறி அணிபவர்கள் கடுமையாக தண்டிக்கப்பட்டனர். சவுக்கடிகள் தரப்பட்டன. கொடூரமான தண்டனை வரிவசூலிக்கப்பட்டன. அது போலவே மீசை, தாடி வைத்துக் கொள்ளும் ஆண்களும் தண்டிக்கப்பட்டனர். வரி வசூலிக்கப்பட்டது கஜானா நிரப்பிக் கொள்ளப்பட்டன. பார்ப்பனிய சனாதனத்தால் முன்வைக்கப் பட்ட இந்தக் கொடூரமான சமூக ஒடுக்குமுறை சட்டமாக்கப்பட்டிருந்தது. ஆட்சியாளர்களான அரசனும் அரசியும் இந்தச் சட்டத்தை செயல்படுத்தினர்.

பார்ப்பனிய சனாதன இந்து தர்ம ஆணைகளை எதிர்த்து எழுந்த பண்பாட்டுக் கிளர்ச்சியாக விரிந்தது தோள் சீலைப் போராட்டம். இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த இத்தகைய போராட்டம் ஆட்சியாளர்கள், பார்ப்பனிய நம்பூதிரிகளின் கூட்டை குறிவைத்து நடத்தப்பட்ட போராட்டமாகும். அரசியல் அடக்குமுறைக்கு எதிராகவும் பொருளாதாரச் சுரண்டலுக்கு எதிராகவும் நடந்த புகழ்பெற்ற போராட்டமாகும். போராட்டத்தின் பெரும் திருப்புமுனையாக வீரப்பெண் நங்கேலியின் உச்ச மடைந்த கோபம் இருந்தது. மேலாடை உடுத்திய நங்கேலியிடம் தண்டனையாக வரி கேட்க வந்த அதிகாரிகளிடம் தனது இரண்டு மார்புகளையும் அறுத்து “வரியாக” கொடுத்திருக்கிறார்! ஆட்சியாளர்கள் முகத்தில் ஓங்கி அறைந்த நங்கேலியின் செயல் மொத்த சமூகத்தையும் போராட்டத்தில் இழுத்து வந்தது. வருணாசிரம தர்மம், கொடுங் கோலோச்சிய காலந்தொட்டே அதற்கெதிரான எதிர்ப்பு பல வடிவங்களில் பல கட்டங்களாக நடந்த வண்ணம் உள்ளன. அந்த எதிர்ப்புகள் மதத்திற்குள் சீர்திருத்தங்களுக்கு காரணமாக அமைந்தன. “மதத்தில் புரட்சி செய்த மகான்” என்று நாத்திகவாதிகளால் கூட புகழப்பட்டதைக்கூட காணமுடியும். பல புதிய மதங்கள் தோன்றுவதற்கு காரணமாகவும் இருந்தன. இந்து மதமும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. கொடூரமான சமூக ஒடுக்குமுறை, அதற்கெதிரான வலுவான எதிர்ப்புகள் என்ற பின்னணியில், கேரளாவில் நாராயண குரு, குமரியில் வைகுண்டர் போன்ற சீர்திருத்தவாதிகள் உருவானார்கள். மனிதர்களிடையே சமத்துவம், தன்மானம், சுயமரியாதை ஆகியவற்றை உயர்த்திப்பிடித்த இவர்கள், தங்களுக்கென்று தன்வழியையும் உருவாக்கிக் கொண்டார்கள். அப்படி உருவானதே அய்யாவழி. இதனால் இவர்கள் ஆட்சியாளர்களின் கடுங்கோ பத்துக்கும் தண்டனை களுக்கும் ஆளானார்கள். இந்தக் கதை எல்லா மதங்களிலும் உண்டு.

சாதிப்படிநிலையும் ஆணாதிக்க கொள்கையும் அடித்தளமாக கொண்டிருக்கும் இந்து மதத்தில் இன்னும் கூடுதலான பன்முகத்தன்மையைக் காணமுடியும். தம்மளவில் குறிப்பிட்ட சில அடையாளங்களைக் கொண்டு இந்தப்பிரிவுகள் இயங்குகின்றன. சில காலப்போக்கில் மங்கி விடுகின்றன. சில தோன்றிய இடத்திற்கே சென்றுவிடுகின்றன. பல, தனி அடையாளங்கள், வழிபாட்டு முறைகளைக் கொண்டிருந்தாலும் மதம் என்ற வகையில் ‘மதத்தின்’ பொதுத்தன்மைகளுக்குள் சுருக்கிக் கொள்கின்றன. அல்லது சுருங்கிப் போகின்றன. இன்னும், சில குறிப்பிட்ட சாதிக்கான அடையாளமாகவும் நலன்களாகவும் மேலும் சுருங்கிப் போகின்றன. இந்தியா முழுவதும் இதற்கான பல எடுத்துக்காட்டுகளைக் கூறமுடியும்.

தோள்சீலைப் போராட்டம் ஒரே நேரத்தில் பண்பாட்டுக் காவலர்களை எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது. அரசு அதிகாரிகளை, அதிகாரம் செலுத்தும் ஆட்சியாளர்களை எதிர்த்துப் போராடியாக வேண்டியிருந்தது. அதனால்தான் தோள்சீலைப்போராட்டத்தை பண்பாட்டு, அரசியல், பொருளாதாரப் போராட்டம் என்று கூறுகிறோம். மதமும் அரசியலும் எப்போதும் பின்னிப்பிணைந்து இருக்கிறது. மதமில்லாமல் அரசியல் இல்லை; அரசியல் இல்லாமல் மதமில்லை என்று இருக்கிறது.

மேலாடை அணியும் உயர்சாதிப் பெண்களுக்கு இணையாக தாங்களும் அணியவேண்டும் என்ற சமத்துவ உணர்ச்சியும் தன்மான உணர்வும் நாகரிக விழிப்பும் கொண்ட அடித்தட்டு பெண்கள், அவர்தம் குடும்பத்தினர் சமூகமாக சமரில் இறங்கினர். கேரளாவில் தோள்சீலைப்போராட்டத்துக்கு "மார் மறைக்கில் சமரம்" என்று பெயர்.

திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இருந்த கன்னி யாகுமரியில் உயர்சாதிப் பெண்கள் ஆடை அணிந்திருந்ததும் அப்போது அறிமுகமாகி இருந்த கிறித்துவத்தில் சேர்ந்திருந்தப் பெண்கள் மேலாடை ("குப்பாயம்") அணிந்திருந்ததும் ஒரு புறத் தூண்டுதலாக இருந்திருக்கமுடியும் என்பதை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. மேலாடை அணிந்திருவர்களின் ஆடைகளை கிழித்தெறிந்தனர் ஆணாதிக்க இந்து மத வெறியர்கள், அந்த ஆடைகளை மரத்தில் தொங்க விட்டு குரூரமாக ரசித்தனர். மேலாடை அணிவோருக்கு ஆதரவாக வரும் கிறித்தவ மிஷனரிகள் என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றம். 1857, முதல் சுதந்திரப் போர் அடுத்து கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து நேரடியாக ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஆங்கிலேய அரசாங்கம், இந்தியர்களின் மதம், கலாச்சாரம் உள்ளிட்டவைகளில் தலையீடு செய்வதில்லை என்று முடிவு செய்திருந்தது. இது வருணாசிர தர்ம சக்திகளை உசுப்பேற்றியது. அவர்கள் இன்னும் தீவிரமான வெறிச்செயல்களில் இறங்கினர்.

இந்து, நாடார் சமுதாயத்தினர்; ஆண், பெண் அனைவரும் ஒன்று திரண்டு தாக்குதலை எதிர்த்து முறியடித்தனர். ஆதிக்க வெறி சக்திகள் தாக்குப்பிடிக்காமல் தோற்று ஓடினர். மூன்று கட்டமாக நடந்த தோள்சீலைப்போராட்டம் 1859 ல் முழு வெற்றி பெற்றது. இறுதியாக 1865ல், மேலாடை அணியக்கூடாது என்ற ஆடைக்கட்டுப்பாடு முழுவதுமாக முடிவுக்கு வந்தது. அப்போது இருந்த சமஸ்தான அரசு இவ்வாறு அரசாணை பிறப்பிக்க வேண்டிய கட்டாயத்தை தோள்சீலைப்போராட்டம் உருவாக்கியது.

ஆடை கூடாது, என்று அநாகரிக கட்டுப்பாடு இருந்ததைப்போலவே பெண்கள், தலித்துகள், விளிம்புநிலை மக்கள் படிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடும் இருந்தது. இதற்கெதிராக தலித் பெண்களுக்கு தலித்துகளுக்கு கல்வி அளிக்கும் இயக்கம் இந்தியா முழுவதும் எழுந்தது. ஆதிக்க சக்திகளின் மூர்க்கத் தனமான எதிர்ப்பை முறியடித்தே இந்த இயக்கம் முன்னேறியது. சாவித்திரி பாய் பூலே அவரது நண்பர் பாத்திமா ஷேக் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள்தான் இந்தியாவின் முதல் பெண் ஆசிரியர்கள் என்று போற்றப்படுகின்றனர். பெண்கள் உடன்கட்டை ஏறுதல், குழந்தைத் திருமணம் போன்ற பல பிற்போக்கு மூடநம்பிக்கை வழக்கங்கள் ஒழிக்கப்பட்டன. ஆண்டவனுக்கு அடியவர்கள் என்ற பேரில் இருந்த இழிவு மிக்க "தேவதாசி" முறை மருத்துவர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் போர்க்குணமிக்க முயற்சியாலும் முற்போக்காளர்களது ஒத்துழைப்பாலும் ஒழித்துக் கட்டப்பட்டது. தாழ்த்தப்பட்டோர்,ஒடுக்கப்பட்ட மக்கள் கோவில் நுழைவுப் போராட்டம் பெரியார் தலைமையில் நடந்த வெற்றிகரமான போராட்டம் நடந்ததன் நூறாவது ஆண்டு வரவிருக்கிறது.

இவ்வாறு, 19 ஆம் நூற்றாண்டு முழுவதும் அநீதி யை அடிப்படையாகக் கொண்ட பார்ப்பனிய-நிலப்பிரபுத்துவ அமைப்பில் இருந்த சமூக ஒடுக்குமுறைகளை, அரசியல் அடக்குமுறைகளை, தீவிரமான பொருளாதாரச் சுரண்டலை எதிர்த்து இந்தியா முழுவதும் அரசியல், பொருளாதார, பண்பாட்டுப் போர்கள் நடந்த வண்ணம் இருந்தன. அந்நிய ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெறுவதற்கான சுதந்திரப் போராட்டத்திற்கும் இணையாகவே சமூக விடுதலைக்கான போராட்டங்கள் நடந்து வந்துள்ளன. பல சமயங்களில் பல இடங்களில் ஒன்றோடு ஒன்று முரண்பட்டும் மறுத்தும்கூட இருந்து வந்துள்ளன. இந்த இடைவெளியில்தான் ஆர்எஸ்எஸ்-பாஜக வின் தோற்றத்துக்கும் காரணமாக இருந்தது.

**போராட்டம் தொடர்கிறது**

நாம் வாழும் இந்த காலகட்டம், கார்ப்பரேட் இந்துத்வா பாசிச ஒடுக்குமுறை காலமாக இருந்து வருகிறது. 19,20 ஆம் நூற்றாண்டில் நடைபெற்ற ஆகச்சிறந்த முற்போக்கு, ஜனநாயக ஆக்கபூர்வமான கூறுகளை உள்ளடக்கிய ஒரு முழுமையான முன்னேற்றத்தை நோக்கி முன்னேற வேண்டும்.

தோள் சீலைப் போராட்டம் போன்றவற்றை நினைவுகூர்வது தற்கால போராட்டங்களுக்கு உரமளிப்பதாக இருக்க வேண்டும். முற்போக்கான போராட்டங்களின் கூறுகளை தற்காலப் போராட்டங்களில் பொருத்திட வேண்டும். புதிய பிரச்சனைகளுக்கு புதிய தீர்வையும் கண்டுணர்ந்து செயல்படுத்திட வேண்டும்.

தற்கால பிரச்சினைகளை அப்படியே வைத்துக் கொண்டு கடந்தகால போராட்டங்களை நினைவு கூர்வது என்ற காரியசாத்திய அணுகுமுறை கூடாது.❒

**அடுத்த இதழில் முடியும்**

# மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகாவில் அரசியல்வாதிகள் ஆக்கிரமிப்புகளில் இருந்து அரசு நிலங்களை மீட்டு வீட்டுமனைகள் வழங்க கோரி இகக(மாலெ) ஆர்ப்பாட்டம்!

07.03.23 அன்று மதுரை வாடிப்பட்டியில் இகக(மாலெ) சார்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் தோழர் முத்துராக்கு தலைமை தாங்கினார். மாநிலக் குழு உறுப்பினர் தோழர் ஈஸ்வரி, அகில இந்திய மாணவர் கழக மாநிலக் குழு உறுப்பினர் தோழர் மங்கையர்க்கரசி, மாவட்டக் கமிட்டி உறுப்பினர் தோழர் சண்முகம், கச்சைகட்டி உள்ளூர் கமிட்டி செயலாளர் தோழர் மூக்கம்மாள், குட்லாடம்பட்டி உள்ளூர் கமிட்டி உறுப்பினர் தோழர் பேச்சியம்மாள், இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் தோழர் மதிவாணன் உள்ளிட்டவர்கள் பேசினர். போராட்டத்தின் விளைவாக, வட்டாட்சியர் நேரில் வந்து 'சாணாம்பட்டியில் கவர்னர் பெயரில் உள்ள நிலத்தில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.



---

# அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் ஆர்ப்பாட்டம்

அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம் சார்பாக மார்ச் 12 அன்று திருநெல்வேலியில் உழைக்கும் பெண்கள் தினத்தை முன்னிட்டும் ஒன்றிய மோடி அரசின் மக்கள் விரோத குறிப்பாக பெண்கள் விரோத கொள்கைகளையும் போக்கையும் கண்டித்தும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தோழர் அன்புச் செல்வி தலைமை தாங்கினார். இகக(மாலெ) நெல்லை மாவட்டச் செயலாளர் தோழர் எம்.சுந்தர்ராஜ், ஏஐசிசிடியு நெல்லை மாவட்ட பொதுச் செயலாளர் தோழர் கா.கணேசன் உரையாற்றினர். தோழர் செய்யதலி பாத்திமா நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் தோழர்கள் சாந்தி, சத்யா, மாரியம்மாள், பூமாரி, மூக்கம்மாள், கிருஷ்ணம்மாள், வள்ளி, ஈஸ்வரி மற்றும் இகக(மாலெ) மாநில நிலைக்குழு உறுப்பினர்கள் தோழர் சங்கரபாண்டியன், தோழர் ஜி.ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.




அதேபோன்று சென்னையில் 15.3.2023 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு தோழர் நிஷாந்தி தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் தோழர் கிருஷ்ணவேணி,

இகக(மாலெ) மாநிலக்குழு உறுப்பினர்கள் தோழர் இரணியப்பன், தோழர் வரதன். தோழர் போர்க்கொடி, புரட்சிகர இளைஞர் கழக மாவட்டத் தலைவர் ராஜேஸ்குமார் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் சமத்துவம், பெண்களின் கவுரவம், பெண்களின் உரிமை பற்றி முழக்கங்கள் எழுப்பப்பட்டன. தோழர் தமிழரசி நன்றி கூறினார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மார்ச் 8 அன்று ஆலங்குடியில் மகளிர் தின உறுதியேற்புக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக மாவட்டச் செயலாளர் தோழர் மணிமேகலை தலைமை தாங்கினார். மாவட்டத்தலைவர் தோழர் ராஜலட்சுமி முன்னிலை வகித்தார். தோழர்கள் வனிதா, இளவரசி, சித்ராதேவி உரையாற்றினார்கள். மேலும் கூட்டத்தில் இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் பழ. ஆசைத் தம்பி கலந்து கொண்டு உரையாற்றினார். அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் தமிழ்நாடு மாநில அமைப்பாளர் தோழர் ரேவதி சிறப்புரையாற்றினார். சமத்துவம், சமூகநீதி, கவுரவமான வாழ்க்கைக்காகப் போராடுவோம், பாலியல் வன்கொடுமை வழக்குகளில் குற்றவாளிகளைத் தண்டிக்க விரைவு நீதிமன்றங்கள் அமைக்கப் போராடுவோம், பெண்கள் விரோத, கார்ப்பரேட் ஆதரவு பாசிச இந்துத்துவ பாஜக-ஆர்எஸ்எஸ் கும்பல்களைத் தோற்கடிப்போம், ஜனநாயகம் காப்போம் என உறுதி மொழி எடுத்துக் கொண்டார்கள்.

புதுச்சேரி மாநிலத்தில் மார்ச் 14 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக மாநிலப் பொறுப்பாளர் தோழர் விஜயா தலைமை தாங்கினார்.






# கோவில்பட்டி தோழர் பொன்ராஜ் நினைவேந்தல்

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி இகக(மாலெ)யின் முதுபெரும் தோழர் பொன்ராஜ் கடந்த 20.2.2023 அன்று மரணமடைந்தார். தோழர் பொன்ராஜின் நினைவேந்தல் கூட்டம் கோவில்பட்டியில் 3.3.2023 அன்று நடைபெற்றது. நினைவேந்தல் கூட்டத்திற்கு இகக(மாலெ) மாநிலக்குழு உறுப்பினர் தோழர் சகாயம் தலைமை தாங்கினார். இகக(மாலெ) அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் வீ.சங்கர், மத்தியக்குழு உறுப்பினர் தோழர் பாலசுந்தரம், மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி, ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் தோழர் டி.சங்கரபாண்டியன், மாலெ தீப்பொறி ஆசிரியர் தோழர் ஜி.ரமேஷ். நெல்லை மாவட்டச் செயலாளர் தோழர் சுந்தர்ராஜ், விருதுநகர் மாவட்டப் பொறுப்பாளர் தோழர் ஆவுடையப்பன், தென்காசி மாவட்டச் செயலாளர் தோழர் ஐயப்பன், இந்திய கம்யுனிஸ்ட் கட்சி, இந்திய கம்யுனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்). மக்கள் அதிகாரம், தமிழ்ப்புலிகள் கட்சி, திராவிட கழகம் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள், முற்போக்கு, ஜனநாயக அமைப்புத் தலைவர்கள், தோழர்கள் சிவராமன். கணேசன் மற்றும் தோழர் பொன்ராஜின் துணைவியார் ஆகியோர் தோழர் பொன்ராஜ் அவர்களைப் பற்றி நினைவு கூர்ந்தார்கள். தோழர் பொன்ராஜ் கட்சியின் தலைமறைவு காலத்தில் இருந்து ஒரு அரசு ஊழியராக இருந்து கொண்டு கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர் தோழர் சங்கர்ராஜூடன் இணைந்து கட்சிப் பணியாற்றினார். தன் வாழ்நாள் முழுவதும் தன்னை மாலெ கட்சிக்காக அர்ப்பணித்துக் கொண்டார். நிகழ்ச்சியில் தோழர் பொன்ராஜின் மகள்கள், மருமகன்கள் மற்றும் உறவினர்களும் கலந்து கொண்டனர். தூத்துக்குடி மாவட்டப் பொறுப்பாளர் தோழர் முருகன் நன்றி கூறினார்.



## ஆளுநர் ரவியைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

தஞ்சை மாவட்டம் பாபநாசம் நகரில், 7.3.23 அன்று, மார்க்ஸ் தத்துவத்தை கொச்சைப் படுத்திப் பேசிய தமிழ்நாடு ஆளுநர் ரவியைக் கண்டித்து, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் பாபநாசம் ஒன்றியச் செயலாளர் தோழர் செல்லத்துரை, மாவட்டச் செயலாளர் தோழர் கண்ணையன், மாநிலக் குழு உறுப்பினர் தோழர் மாசிலாமணி, பெண்கள் கழக மாவட்டக் குழு உறுப் பினர் தோழர் விஜயாள், பாபநாசம் நகர செயலாளர் தோழர் கணேசன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.03.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

## இககக(மாலெ) அகில இந்திய மாநாடு விளக்கக் கூட்டம்




## புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கோரி




## மகளிர் தின ஆர்ப்பாட்டம்




Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh